# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. V Issue 8 November 2015

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . . | 2 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 18 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 19 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . | 21 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 23 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 25 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . | 27 |
| தனித்தன்மையும் அதற்குரிய அடையாளங்களும் . . . . . . . . . | 30 |
| நிலையான சமர்ப்பணம் — நெடு நாளைய யோகம். . . . . . . . . . . | 36 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 47 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 54 |
| **அன்னை இலக்கியம்** | |
| எந்த நேரமும் அன்னை வருவார் . | 57 |

**ஜீவியத்தின் ஓசை**

*வாழ்வை*

*மனத்தால்*

*வாழ்வது*

*யோகம்.*

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஸ்ரீ அரவிந்தம்

### லைப் டிவைன்
(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேக்கப்ஸ்
தமிழாக்கம்: வித்யா ரங்கன்
திருத்தம்: ஸ்ரீ கர்மயோகி

## XXVIII. Supermind, Mind and the Overmind Maya

Page 286
Para 15

In our subliminal Mind there is a larger power of communication.
So in this Mind also, this larger power and mutuality still remains.
There is a freer play of mentality.
There is a freer sense than human mind possesses.

The Ignorance is not complete.
A conscious harmony, an interdependent organisation of right relations is more possible.
Mind is not yet perturbed by blind Life forces.

It is not yet obscured by irresponsive Matter.
It is a plane of Ignorance, but not yet of falsehood or error.

Or at least the lapse into falsehood and error is not yet inevitable.
This Ignorance is limitative, but not necessarily falsificative.

There is limitation of knowledge, an organisation of partial truths.



## 28. சத்திய ஜீவியம், மனம், தெய்வீக மனத்தின் மாயை

நம் அடி மனத்தில் கருத்துப் பரிமாற்றத்திற்கான பெரிய சக்தி உறைகிறது.
அதுபோல் இந்த மனத்திலும் கருத்துப் பரிமாற்ற சக்தியும் பரஸ்பரமும் இன்னும் உள்ளன.
அங்கு மனம் சுதந்திரமாகச் செயல்படுகிறது.
மனித மனம் பெற்றிருப்பதைவிட சுதந்திரமான உணர்வு அங்கு உண்டு.
அறியாமை முழுமை பெறவில்லை.
சரியான தொடர்புகள் ஒன்றையொன்று சார்ந்தமைந்த ஜீவனுள்ள சுமுகம் எழுவது அதிக சாத்தியமாகும்.
கண்மூடித் தனமான பிராண சக்திகளால் மனம் கலக்கமடையும் நிலையை இன்னும் பெறவில்லை.
அசையாத ஜடத்தால் அது இன்னும் இருளாகவில்லை.
அது அறியாமைக்குரிய தளமாகும், ஆனால் இன்னும் தீமை அல்லது தவற்றுக்குரிய இடம் அல்ல.
அல்லது குறைந்த பட்சம் தீமை, தவறு இவற்றில் விழுவது இன்னும் தவிர்க்க முடியாததல்ல.
இந்த அறியாமை அளவுக்குட்பட்டது, ஆனால் பொய்மையாக இருக்க வேண்டிய அவசியமில்லை.
அங்கு ஞானம் பகுதியான சத்தியத்தின் அமைப்பைப் பெற்று அளவுக்குட்பட்டு உள்ளது.

But there is no denial or opposite of truth or knowledge.

The organisation of partial truths is on a basis of separative knowledge.
It persists in Life and subtle Matter.

The exclusive concentration of Consciousness-Force puts them into separative action.
But it does not entirely sever or veil Mind from Life.

It does not veil Life from Matter.
The complete separation does take place.
But it takes place only when the stage of Inconscience has been reached.
Our world of manifold Ignorance arises out of that tenebrous matrix.
There are other still conscient stages of the involution.

They are indeed organisations of Conscious Force.
In them each lives from his own centre.

Each follows out his own possibilities.

And the predominant principle itself, whether Mind, Life or Matter, works out things on its own.
It works them out on its independent basis.
But what is worked out are truths of itself, not illusions.



ஆனால் அங்குச் சத்தியம் அல்லது ஞானத்தின் மறுப்போ எதிர்ப்போ இல்லை.
பகுதியான சத்தியத்தின் அமைப்பு பிரிந்த ஞானத்தை அடிப்படையாகக் கொண்டது.
அது வாழ்வு மற்றும் சூட்சும ஜடத்தில் தன்னை நிலைநிறுத்துகிறது.
சித் சக்தியின் பிரத்தியேக நிஷ்டை அவற்றைத் தனித்துச் செயல்பட வைக்கிறது.
ஆனால் அது முழுவதுமாக மனத்தை வாழ்விலிருந்து துண்டிப்பதில்லை.
அது வாழ்வை ஜடத்திலிருந்து மறைப்பதில்லை
முழுமையான பிரிவினை அங்கு ஏற்படுகிறது.
ஆனால் அது ஜடஇருள் நிலையை அடைந்த பின்னரே ஏற்படுகிறது.
பன்மடங்கு அறியாமையாலான நம் உலகம் அவ்விருண்ட அமைப்பிலிருந்து வெளிவருகிறது.
சிருஷ்டியில் மேலும் ஆழ்ந்து மறைந்து இருளான நிலைகள் உண்டு.
உண்மையில் அவை சித் சக்தியின் அமைப்புகள் ஆகும்.
அவற்றில் ஒவ்வொன்றும் அதன் சொந்த மையத்திலிருந்து வாழ்கின்றன.
ஒவ்வொன்றும் அதன் சொந்த சாத்தியங்களைப் பின்பற்றுகின்றன.
இதில் எந்தத் தலையாய தத்துவமும் – மனம், வாழ்வு, ஜடம் – தன் விஷயங்களைத் தானே திட்டமிட்டுக் கொள்கிறது.
அது சுதந்திரமாக அதைச் செயல்படுத்துகிறது.
ஆனால் அது செயல்படுத்துவது அதன் சுய சத்தியங்களையே தவிர, மாயைகளை அல்ல.

Or not a tangle of truth and falsehood.
Or not a tangle of knowledge and Ignorance.

Consciousness-Force can exclusively concentrate on Force and Form.
Then it seems phenomenally to separate Consciousness from Force.
It can absorb Consciousness in a blind sleep lost in Form and Force.
Then Consciousness has to struggle back to itself.

It does so by a fragmentary evolution.
That necessitates error and makes falsehood inevitable.

Nevertheless, these things too are not illusions.
They have not sprung out of an original Non-Existence.
They are, we might say, the unavoidable truths of a world born out of Inconscience.
For the Ignorance is still in reality a knowledge seeking for itself.
It seeks behind the original mask of Inconscience.

It misses and finds.
Its results are natural and even inevitable on their own line.

They are the true consequence of the lapse.
In a way, even, they are the right working of the recovery from the lapse.



அல்லது சத்தியம் மற்றும் பொய்ம்மையின் சிக்கல் அல்ல.
அல்லது ஞானம் அறியாமை இவற்றின் குழம்பிய நிலையும் அல்ல.
சக்தி ரூபம் இரண்டிலும் சித் சக்தி பிரத்தியேக நிஷ்டையில் இருக்க முடியும்.
பின் சக்தியிலிருந்து சித்தைப் பிரிப்பது அசாதாரண செயலாகிறது.
அது சக்தி ரூபம் இரண்டிலும் விழிப்பற்ற தூக்கத்தில் தன்னையிழந்து ஜீவியத்தைக் கிரகிக்க முடியும்.
அப்படியானால் ஜீவியம் தன்னைத் திரும்பப் பெற சிரமப்பட வேண்டும்.
அது துண்டுதுண்டான பரிணாமத்தால் அதைச் செய்கிறது.
இது குறையை அவசியமாகவும் பொய்ம்மையைத் தவிர்க்க முடியாததாகவும் ஆக்குகிறது.
இருப்பினும், இவையும் மாயை அல்ல.
மூலமான அசத்திலிருந்து திடீரெனத் தோன்றியவை அல்ல.
அவை, ஜட இருளிலிருந்து எழுந்த ஒரு உலகின் தவிர்க்க முடியாத உண்மைகள் என்று நாம் கூறலாம்.
அறியாமை என்பது உண்மையில் தன்னைத் தான் விழையும் ஓர் அறிவாகும்.
ஜட இருள் எனும் மூலமான முகத்திரையின் பின்னிருந்து அது விழைகிறது.
அது தவற விடுகிறது, தேடிக் கண்டுபிடிக்கிறது.
அதன் பலன்கள் இயற்கையானவை மற்றும் அவற்றின் வழியில் தவிர்க்க முடியாதவையும் ஆகும்.
வீழ்ச்சியால் ஏற்படும் உண்மையான விளைவுகள் அவை.
ஒரு வகையில், அவற்றின் செயல்பாடு வீழ்ச்சியிலிருந்து மீளும் வகைக்குரிய சரியான வழியாகும்.

Existence plunges into an apparent Non-Existence.
Consciousness plunges into an apparent Inconscience.
Delight of existence plunges into a vast cosmic insensibility.

These are the first results of the fall.
By a struggling fragmentary experience they return from the fall.
By that, Consciousness is rendered into the dual terms of truth and falsehood.
It is rendered into knowledge and error.
Existence is rendered into the dual terms of life and death.
Delight of existence is rendered into the dual terms of pain and pleasure.
These are the necessary process of the labour of self-discovery.
A pure experience of Truth, Knowledge, Delight would here be itself a contradiction.
It would be a contradiction of the truth of things.

It could be otherwise.
But only if all beings in the evolution were responsive to the psychic element within.
Or if they were responsive to the Supermind underlying Nature's operations.

But here there comes in the Overmind law.



சத் தோற்றத்தில் ஜீவனற்ற அசத்தில் மூழ்குகிறது.
ஜீவியம் தோற்றமான ஜட இருளில் அமிழ்கிறது.
ஆனந்தம் பரந்த பிரபஞ்சத்தின் புலனுணர்வற்ற நிலைக்குள் புகுகிறது.
இவை வீழ்ச்சியின் முதல் விளைவுகள்.
கடினமான முறிந்த அனுபவங்களின் வாயிலாக அவை வீழ்ச்சியிலிருந்து மீள்கின்றன.
இவ்வாறாக, சித் என்பது உண்மை மற்றும் பொய்ம்மை எனும் இரட்டை நியதிகளாக ஆகிறது.
அது ஞானம் மற்றும் பிழை என ஆகிறது.
சத் இரட்டை விதிகளான வாழ்வு மற்றும் மரணம் என்றாகிறது.
ஆனந்தம், வலி மற்றும் இன்பமாகிறது.

சுய தேடலை மேற்கொள்ள அவசியமான வழிமுறைகள் இவை.
சத்தியம், ஞானம், ஆனந்தம் இவற்றின் தூய அனுபவம் இங்கு எதிர்மறையான அனுபவமாகிறது.
விஷயங்களின் உண்மைக்கு நேர் மாறான நிலையாக அது இருக்கும்.
அது அதற்கெதிரான நிலையாக இருக்க முடியும்.
ஆனால் அதற்கு அனைத்துப் பரிணாம ஜீவன்களும் தம் உள்ளேயுள்ள சைத்தியத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்.
அல்லது இயற்கையில் அடிப்படையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் சத்திய ஜீவியத்தோடு தொடர்பு கொள்ள வேண்டும்.
ஆனால் இங்குத் தெய்வீக மனத்தின் சட்டம் செயல்பாட்டிற்கு வருகிறது.

That law says each Force works out its own possibilities.

This is a world where  an original Inconscience and a division of consciousness are the main principles.
In such a world, the natural possibilities would be the emergence of Forces of Darkness.
These forces are impelled to maintain and live by the Ignorance.
It is an ignorant struggle to know originative of falsehood and error.
It is an ignorant struggle to live engendering wrong and evil.

It is an egoistic struggle to enjoy.
It is the parent of fragmentary joys and pains and sufferings.

These are therefore the inevitable first-imprinted characters.
But they are not the sole possibilities of our evolutionary existence.
Still, the secret realities must emerge.
This is because Non-Existence is a concealed Existence.

Inconscience is a concealed Consciousness.
Insensibility is a masked and dormant Ananda.

The hidden Overmind and Supermind too must in the end fulfil themselves.



அச்சட்டத்தின்படி ஒவ்வொரு சக்தியும் அதன் சாத்தியங்களைத் தானே திட்டமிடுகிறது.
இது மூலமான ஜட இருள்  மற்றும் ஜீவியத்தின் பிரிவினை இரண்டையும் முக்கிய விதிகளாகக் கொண்ட உலகம்.
அத்தகைய உலகில், இருண்ட சக்திகள் தோன்றுவது இயற்கையான சாத்தியக் கூறாகும்.
இச்சக்திகள் அறியாமையைப் பராமரிக்கும், அறியாமையாலான வாழ்வை மேற்கொள்ளும்.
அது பொய் மற்றும் தவற்றின் மூலத்தை அறிய முயலும் தெளிவற்ற போராட்டம்.
அது பிழை மற்றும் தீமையை உற்பத்தி செய்யும் வாழ்விற்கான அஞ்ஞானப் போராட்டம்.
அது இன்பத்தை அனுபவிக்கும் அகந்தைக்கான போராட்டம்.
அது பூர்த்தியற்ற இன்பங்கள், துன்பங்கள் மற்றும் வேதனைகள் இவற்றின் சிருஷ்டிகர்த்தா.
இவைகள் இதன் தவிர்க்க முடியாத முதல் அடையாளமாகத் தோன்றும் இயல்புகள்.
இவைகள் மட்டுமே நம் பரிணாம வாழ்வின் சாத்தியங்கள் அல்ல.
மேலும் மறைந்திருக்கும் சத்தியங்கள் வெளிப்பட வேண்டும்.
ஏனென்றால் அசத் என்பது உண்மையில் மறைந்துள்ள சத் ஆகும்.
ஜட இருள் என்பது சித் முழுவதுமாக மறைந்த நிலை.
உணர்ச்சியற்ற நிலை என்பது முகமூடியணிந்த மற்றும் செயலிழந்த ஆனந்தம்.
மறைந்துள்ள தெய்வீக மனம் மற்றும் சத்திய ஜீவியம் இவையும் முடிவில் தங்கள் பூரணத்தை எய்தும்.

They must do so in this apparently opposite organisation from a dark Infinite.

Page 288
Para 16

Two things render that culmination more facile than it would otherwise be.
Overmind has descended towards material creation.
In that descent it has originated modifications of itself.
These modifications can bring the concealed truth of things nearer to us.
Intuition is one such modification.
With its penetrative lightning flashes of truth, Intuition lights up local points.

It lights up stretches of country in our consciousness.

By opening ourselves more widely, we can become ourselves also intuitive.
First we can open in the inner being.
Then as a result we can open in the outer surface self.
We can open to the messages of these higher ranges of consciousness.
We can grow into them.
We cannot limit ourselves to the intellect and sense.
We can become capable of a more universal comprehension.



இருண்ட அனந்தத்திடமிருந்து வெளிப்பட்டுள்ள தோற்றத்தில் எதிர்மறையாக உள்ள இவ்வமைப்பில் அவை இதைச் செய்ய வேண்டும்.

இந்த உச்ச கட்ட முடிவை எளிதில் அடைய இரு விஷயங்கள் உதவுகின்றன.
தெய்வீக மனம் ஜடமான சிருஷ்டியை நோக்கி இறங்கியது.
அவ்விறக்கத்தில் அது தன்னில் மாற்றங்களை எழுப்பியுள்ளது.
இம்மாற்றங்கள் பொருட்களில் மறைந்துள்ள சத்தியத்தை நம்மருகே கொண்டு வர முடியும்.
உள்ளுணர்வு என்பது இத்தகைய மாற்றங்களில் ஒன்று.
அதன் ஊடுருவிப் பாயும் மின்னல் ஒளிபோன்ற சத்தியத்தின் மூலம் உள்ளுணர்வு அதைச் சுற்றியுள்ள மையங்களை ஒளியூட்டுகிறது.
நம் ஜீவியத்தின் நீண்ட பரப்புகளை அது பிரகாசிக்க வைக்கிறது.
நாம் நம்மை அதிகமாகப் பரந்து விரியப்படுத்துவதன் மூலம் உள்ளுணர்வை அடையலாம்.
முதலில் நம் அக ஜீவனில் திறப்பை ஏற்படுத்தலாம்.
அதன்பின் நம் புறப் பரப்பில் விழிப்பை ஏற்படுத்தலாம்.
உயர் பரப்புகளில் வதியும் ஜீவியத்தின் செய்திகளை நாம் அறியலாம்.
அவற்றில் நாம் வளர்ச்சி அடையலாம்.
நாம் அடையக்கூடிய அறிவு மற்றும் உணர்வு வரையறையற்றது.
அதிகமாகப் பிரபஞ்சத்தை அறியும் திறனை நாம் பெற முடியும்.

We can become capable of a direct touch of truth in our very self and body.
In fact flashes of enlightenment from these higher ranges already come to us.
But this intervention is mostly fragmentary, casual or partial.
We have still to begin to enlarge ourselves.

We have to enlarge into their likeness.
We have to organise in us the greater Truth activities of which we are potentially capable.

But, secondly, Overmind, Intuition, and even Supermind are principles inherent and involved.

They are involved in the Inconscience from which we arise in the evolution.
And they are inevitably destined to evolve.
But they are secretly present and actively occult.

They are flashes of intuitive emergence in the cosmic activity of Mind, Life and Matter.
It is true that their action is concealed.

And, even when they emerge, it is modified.
It is modified by the medium, material, vital, mental in which they work.
It is not easily recognisable.



நம் ஆன்மா மற்றும் உடலில் நேரடியாகச் சத்தியத்தின் தீண்டுதலைப் பெறும் திறனை அடைய முடியும்.
உண்மையில் உயர் பரப்புகளிலிருந்து ஞானம் ஒளியாகக் கீழிறங்கி நம்மை ஏற்கனவே அடைந்துள்ளது.
ஆனால் இந்த ஞானம் பெரும்பாலும் துண்டுதுண்டானது, தற்காலிகமானது, அல்லது பகுதியானது.
நாம் இன்னும் நம்மை முழுவதுமாக விரிவுபடுத்த ஆரம்பிக்கவில்லை.
உயர் பரப்புகளுக்கு ஏற்றவாறு நாம் விரிந்து பரவ வேண்டும்.
உயர் சத்தியச் செயல்பாடுகளின் அமைப்பை நம்மில் ஏற்படுத்த வேண்டும். அவற்றிற்கான திறனை நாம் பெற்றுள்ளோம்.
ஆனால் இரண்டாவதாக, தெய்வீக மனம், உள்ளுணர்வு மற்றும் சத்திய ஜீவியமும் உள்ளுறையாக மறைந்துள்ள தத்துவங்கள்.
ஜட இருளில் அவை புதைந்து பரிணாமத்தில் வெளி வருகின்றன.
அவை பரிணாமம் பெறுவது தவிர்க்க முடியாதது.
ஆனால் அவை மறை பொருளாக உள்ளன மற்றும் சூட்சுமமாக இயங்குகின்றன.
அவை மனம், உணர்வு மற்றும் ஜடத்தின் பிரபஞ்ச இயக்கத்தில் எழும் மின்னல் போன்ற உள்ளுணர்வு.
அவற்றின் செயல்பாடு மறைக்கப்பட்டுள்ளது என்பது உண்மை.
அவை வெளிப்படும்போது அது மாற்றமடைகிறது.
அவை செயல்படும் கருவி, பொருள், உணர்வு, அறிவு இவற்றால் அது மாற்றம் அடைகின்றது.
அதை எளிதாக அடையாளம் காண முடியாது.

Supermind cannot manifest itself as the Creator Power in the universe from the beginning.

For if it did, the Ignorance and Inconscience would be impossible.
Or else the slow evolution necessary would change into a rapid transformation scene.
Yet at every step of the material energy, we can see the stamp of inevitability.
It is given by a supramental creator.
In all the development of life and mind, the play of the lines of possibility and their combination are there.

This is the stamp of Overmind intervention.
Life and Mind have been released in Matter.
So too must in their time these greater powers of the concealed Godhead emerge.
They must emerge from the involution and their supreme Light descend into us from above.

Page 289
Para 17

A divine Life in the manifestation is then not only possible.
It is possible as the high result and ransom of our present life in the Ignorance.
But, if these things are as we have seen them, it is the inevitable outcome and consummation of Nature's evolutionary endeavour.



ஆரம்பத்திலிருந்தே சத்திய ஜீவியம் தன்னை ஒரு சிருஷ்டிக்கும் சக்தியாக பிரபஞ்சத்தில் வெளிப்படுத்த முடியாது.
அப்படி ஏற்பட்டால், அறியாமை மற்றும் ஜட இருள் ஏற்பட வாய்ப்பில்லை.
அல்லது நிதானமாக ஏற்படும் பரிணாமம் விரைந்த திருவுரு மாற்றத்தை ஏற்படுத்தும் களமாக மாறி விடும்.
இருந்தாலும் ஜட சக்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் தவிர்க்க முடியாத தன்மையின் முத்திரையை நாம் காண முடியும்.
ஒரு சத்திய ஜீவிய சிருஷ்டிகர்த்தா ஏற்படுத்தியுள்ளது இது.
அனைத்து வாழ்வு மற்றும் மனத்தின் வளர்ச்சியில் சாத்தியக் கூறுகள் செயல்படும் வழிகள் மற்றும் அவற்றின் கூட்டமைப்பைக் காணலாம்.
இது தெய்வீக மனத்தின் செயல்பாட்டின் முத்திரையாகும்.
வாழ்வு மற்றும் மனம் ஜடத்தில் வெளி வந்துள்ளன.
அது போல், இந்த மறைந்துள்ள தெய்வீக உயர் சக்திகளும் அவற்றுக்கான காலகட்டத்தில் வெளிப்பட்டாக வேண்டும்.
புதைந்துள்ள நிலையிலிருந்து அவை எழுந்து வெளிப்பட்டு அவற்றின் உன்னத ஒளி மேலிருந்து நம்முள் இறங்க வேண்டும்.

சிருஷ்டியில் தெய்வீக வாழ்வு சாத்தியம் மட்டுமல்ல.
அது உயர்ந்த முடிவை எட்டுவது மற்றும் அறியாமையில் உழலும் வாழ்வை மீட்பது ஆகும்.
நாம் கண்டபடி இவ்விஷயங்கள் இருக்குமானால், அது இயற்கையின் பரிணாமத்திற்கான முயற்சி வெளிப்பட்டு பூரணமடைவது ஆகும்.

இம்மாதச் செய்தி

# மௌனமான உணர்வின் மகிழ்ச்சி மனத்தை ஆத்மாவாக்கும்.



**சாவித்ரி**

**Page 178: To find new bodies for the Infinite**
***அனந்தம் ஏற்கும் புது உடலைத் தேடி***

- ✡ கற்பனையைக் கடந்தவற்றின் உருவகங்கள்
- ✡ காலம் கடந்ததைத் தன் பிடியினுள் கவர்ந்திழுத்தது
- ✡ தான் செய்ததையும், தான் யார் என்பதையும் அறியாதவள்
- ✡ திகைப்பையூட்டும் முகமூடியின் கீழ் அனைத்தும் உயிர் பெற்றன
- ✡ மறைந்த மகிமை தவிர மற்றதின் சாயல்
- ✡ மாயத் தந்திரத்தின் அம்சம் மறைவில் தெரிகிறது
- ✡ காலத்தின் கதிக்குரிய சத்தியம் நடிக்கும் செயல்
- ✡ மாறும் ஆத்மாவின் குறையான சிருஷ்டி
- ✡ உயிர் மாறும்பொழுது தானும் மாறும் உடல்
- ✡ கடுகளவு கருவி, கருத்திற்கெட்டாத கடமை
- ✡ உருவமற்ற ஜீவியத்தின் பரந்து விரிந்த அரங்கம்
- ✡ மனமும் புலனும் எழுதும் சிறு எழுதுகோல்
- ✡ முடிவில்லாத சத்தியத்தின் முடிவற்ற முகப்பு
- ✡ காலத்தைக் கடந்த புதிர் காலத்துள் செயல்படும்
- ✡ செயலில் பிடிபடாத கனவுலகக் கருத்தின் பெருமை
- ✡ பாடு வேகமான தீவிரம் நிறைந்த வேதனை
- ✡ பூரித்துப் புண்படும் பெருமையான சாபம்
- ✡ தெரிந்து எழும் அவதி தெளிந்த அறிவின் முடிவு

✡ வலிமையான அவளிதயம் வலிந்து தடுக்கும் பாங்கு

✡ உலகம் உள்ளவரை உயிரோடுள்ள அவள் தோல்வி

✡ ஆச்சரியமாக அறிவின் பார்வையை மங்கவைக்கும்

✡ வர்ணிக்க முடியாத அழகு வளம் நிறைந்த மடமை

✡ வாழத்துடிக்கும் அதி அற்புதமான பைத்தியம்

✡ துணிந்த ஆனந்தம் புல்லரிக்கும் புளகாங்கிதம்

✡ இதுவே அவள் ஜீவனின் சட்டம், ஆதி மூலவன்

✡ திகட்டும் ஆனால் எழாது திருப்தி

✡ விறுவிறுப்பான உறுதி அனைவரையும் திணறடிக்கும்

✡ பலமுகங்கொண்ட பிரம்மத்தின் கதை

✡ ஒரு சத்தியத்தின் ஓராயிரம் வகைகள்

✡ அவள் லோகத்தைத் தொட்ட சத்தியத்தின் ஆடையின் ஓரம்

✡ தான் தேடும் கனவைத் தன்னுலகமாக்கி

✡ சத்தியத்தின் விக்ரஹம், விழிப்பான புதிரின் ரூபம்

✡ பூமியின் மனம் சிறைப்பட்டு தவழத் தயங்குகிறது

✡ தோற்றம் தெரிவிக்கும் வலுவான தடைகள்

✡ கனவு காணும் மனத்தையும், ஆத்மாவையும் நம்ப முடிவு செய்து

## ஜீவிய மணி

*நினைவால் வாழ்பவன் அனைவரையும் அழிக்க அழைப்பவன்.*
*நினைவழிந்தவன் நினைவே சாதனை.*



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/25. கெட்ட எண்ணம் வெட்கம் கெட்ட சுறுசுறுப்பு

- எண்ணம் மனத்தைச் சுறுசுறுப்பாக்கும்.
- வெட்கம் என்பது ஊரை விட்டு விலகும் உணர்ச்சி.
- அதுபோன்ற செயல் வெட்கம் தரவில்லை எனில் அவன் வெட்கம் கெட்டவனாவான்.
- நல்ல எண்ணம் மனத்தை விரிவுபடுத்தும்.
- கெட்ட எண்ணம் மனத்தைச் சுருக்கும்.
- *நல்ல எண்ணம் மனத்தைச் சுறுசுறுப்பாக்கும்.*
- பிறருக்கு நல்லது செய்வது நல்ல எண்ணம்.
- பிறருக்குக் கெடுதல் செய்வது கெட்ட எண்ணம்.
- கெட்ட எண்ணம் எழுந்தால் மனம் வெட்கப்படும்.
- *கெட்ட எண்ணம் சுறுசுறுப்பாக்கும்.*
- வெட்கப்படுபவனுக்குக் கெட்ட எண்ணம் எழாது.
- *வெட்கம் கெட்ட எண்ணம் சுறுசுறுப்பாவது கெட்ட எண்ணத்தால்.*
- எவரும் லஞ்சம் வாங்க, பொய் சொல்ல, பழி வாங்க வெட்கப்படுவார்கள்.
- பழி வாங்க சுறுசுறுப்பாகச் செயல்படுவது கெட்ட எண்ணம்.
- உன்னைப் பழி வாங்குவேன் என சபதம் செய்பவன் சுறுசுறுப்படைகிறான்.
- தனக்குத் தவறு செய்தவனை அழிக்க முயல்வது சரியில்லை என்றாலும் அது சுபாவம்.
- *எதுவும் செய்யாதவனைப் பழி வாங்க நினைப்பது மனித சுபாவமில்லை.*
- சாமான்ய மனிதன், சத் புருஷன், மானுஷ ராட்சஸா என மனித குலத்தைப் பாகுபாடு செய்தவர் தனக்கு லாபமுமில்லாமல், பிறரை அழிக்க முயல்பவனை *எப்படி விளக்குவது என்று அறியாமல் அவனை விளக்க மொழியில் சொல்லில்லை என்றார்.*
- சுறுசுறுப்பு வளரும் சக்தி.

- நல்லெண்ணம் சுறுசுறுப்புத் தரும்.
- கெட்ட எண்ணம் சுருங்கும்.
- கெட்ட எண்ணம் சுறுசுறுப்புப் பெறுவதை வெட்கம் தடுக்கும்.
- ஒரு பலன் பெற மனிதன் சுறுசுறுப்பாகச் செயல்படுவான்.
- பலனற்ற காரியம் சுறுசுறுப்புத் தராது.
- பிறர் பெறும் பலனைத் தடுப்பது கெட்ட எண்ணம்.
- ஒருவர் மகள் திருமணமாக உதவுவது நல்லெண்ணம்.
- திருமணத்தைத் தடுப்பது கெட்ட எண்ணம்.
- நம் ஆன்மிக இலக்கியங்கள் *கெட்ட எண்ணத்தின் மூலத்தை அறிய முயலவில்லை.*
- கெட்ட எண்ணமும் நல்லெண்ணமும் இரட்டைகள்.
- அதுவே முடிவான நிலையில்லை.
- அவை இரண்டும் உயர்ந்து இணைகின்றன. அது உயர்ந்த நிலை.
- கெட்டது உற்பத்தியாகாமல், நல்லது உற்பத்தியாகாது.
- இரண்டும் எண்ணம்.
- இரண்டும் உயர்வது எண்ணம் ஜீவியமாகும் நிலை.
- *இலட்சியவாதியின் நல்லெண்ணம் சுறுசுறுப்புத் தரும்.*
- அது பெருமை தரும் செயல்.
- எதிரானது கெட்ட பெயர் தரும்.
- கெட்ட பெயர் பெற வெட்கப்பட வேண்டும்.
- *கெட்ட பெயர் பெற வெட்கப்படாதிருப்பது கெட்ட எண்ணம்.*
- விக்காம் ஓடிப் போனது வெட்கப்பட வேண்டிய விஷயம்.
- அவனுக்கு வெட்கமில்லை.
- *வெட்கப்பட வேண்டிய செயலுக்கு வெட்கப்படாமலிருப்பது கெட்ட எண்ணம்.*
- ரிஷிகட்கும், அயோக்கியனுக்கும் உள்ள மனநிலையது.



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 118. எதிரி மனம் மாறி மாலையிட்டால் அவருக்குப் பூரண யோகம் பலிக்கும்.

- மனம் மாறாமல் செயல் மாறுவது உலக இயல்பு.
- தினமும் மிரட்டி அதிகாரிக்கு மொட்டைக் கடிதம் எழுதுபவன் காரியம் ஆக வேண்டும் என்ற நேரம் அவருக்கு ஆபீஸில் மாலையிட்டு வணங்கினான்.
  *அதிகாரி கண்களில் நீர் வழிந்தது.* இது கயவனின் காரிய வாதம்.
- மகன் சம்பாதிக்கிறான் என்றால் கணவனுக்கு மரியாதை-யிருக்காது.
  மனைவி மகன் தைரியத்தில் தாழ்ந்த குடும்பங்களில் கணவனை அதிகாரம் செய்வாள். கணவன் பணவரவு உயர்ந்தால் மனைவிக்குக் கணவனிடம் மரியாதை வரும். எலிசபெத் பெம்பர்லியைக் கண்டு டார்சியை ஏற்றதைப் போன்றது.
- அன்பர் மனநிலை உயர்ந்து ஆத்ம நிலையானால், அதைக் கண்ட எதிரி மனம் மாறினால், அன்பருக்குப் பூரணயோகம் பலிக்கும்.
- அன்னை முறைகளை மட்டும் பின்பற்றும் அன்பரை கூட்டாளி அல்பமாகக் கருதினார். எழுத்தில் ஏமாற்றினார், உரிமையை மறுத்தார், பணம் போட்டவன் செய்யக்கூடிய அத்தனையையும் செய்தார். பணம் போட்டவர் எவருமே செய்யாத அட்டூழியத்தை அசிங்கமாக, ஆபாசமாகச் செய்து பொய்க் கேஸ் போட்டார். ஜட்ஜுக்கு கேஸ் பொய் என்று புரிந்தது. அதைத் தீர்ப்பாக முதலில் கூறினார். ஒரு பொய் கோர்ட்டில் அம்பலமாயிற்று. அடுத்த பொய் சொன்னார். அதுவும் உடைந்தது. மூன்றாம் பொய் சொன்னார். ஜட்ஜுக்கு

மூன்றும் பொய் எனப் புரிந்தது. அவர் 'நீங்கள் கூறிய மூன்று விஷயங்களில் எதை நான் நம்புவது?' என வாதியைக் கேட்டார். அதே பார்ட்னர், அன்பர் மனம் மாறியதால் "நான் என்னால் முடிந்ததெல்லாம் செய்து பார்த்தேன். எதுவும் பலிக்கவில்லை. *உங்கள் உரிமையை நானே எழுதிக் கொடுக்கிறேன்*" என்றார். இது எதிரியின் மனமாற்றம்.

அன்பரின் மனம் உண்மையில் மாறியதால், எதிரியின் மனம் மாறியது.

அன்பர் மூன்றில் ஒரு பங்கு உரிமை கோரினார். முழு உரிமை வந்தது. அன்பர்கட்கு வீட்டிலும், நண்பர்களிடமும், பார்ட்னரிடமும், ஆபீஸிலும் எதிரிகள் உண்டு. அன்பரின் உண்மையான மாற்றத்தால் எதிரி மாறுவது *பூரணயோக வாயில் திறப்பதாகும்.*

- அன்பர் நிலை உலகில் இதுவரை எவரும் பெறாத நிலை.
- சக்ரவர்த்தியானாலும் 500 வருஷத்தின் முன் காரில் போயிருக்க முடியாது.
- A/C-யின் குளிர் வாசம் கிடைத்திருக்காது. கம்ப்யூட்டர், email கிடையாது.
- காலம் வேறு. இன்று காலம் மாறியதால் எளியவர்க்கும் அன்று *ராஜாக்களுக்கும் கிட்டாத பலனுண்டு.*
- அன்பர் முன்னோடி.
- அவர் குறைந்தபட்சம் பெறுவது குபேர செல்வம்.
- அதிகபட்சம் பெறக்கூடியது *இறைவன் பெற்ற ஆனந்தம்.*

**ஜீவிய மணி**

*மனவளம் வளமான வாழ்வு.*
*வளமான வாழ்வு கனமான அஸ்திவாரம்.*



## அஜெண்டா

**'ஓ' எனக் கதறாமலிருக்க Mother பெரும் பாடுபட்டார்.**

Volume 13, page 414

- யோகம் சாதகருக்கு ஒளிமயமான பாதை **Sunlit Path** என்றார் **Mother.**
- "இந்த யோகத்தைச் செய்யும்படி நான் யாரையும் அழைக்க மாட்டேன்" என்றார்.
- இந்த யோகம் உலகத்திற்குப் புதியது.
- இதற்குரிய பாதை பொன்மூடியைக் கடந்தது.
- **Overmind** தெய்வீக மனத்திற்கும் சத்திய ஜீவியத்திற்கும் இடையே மௌனமும் சூன்யமும் உள்ளது என்றார் பகவான்.
- அங்குத் தான் புதிய பாதை ஏற்படுத்த முயல்வதாகக் கூறினார்.
- அப்பாதையில் நுழைய மூன்று திருவுருமாற்றங்களைப் பிரபஞ்ச ஜீவன் பெற்றிருக்க வேண்டும்.
- மூன்றாம் திருவுருமாற்றம் சத்திய ஜீவியத்தால் மட்டும் முடியும்.
- இரண்டாம் திருவுருமாற்றம் ஆன்மாவுக்குரியது.
- முதல் திருவுருமாற்றம் சைத்திய புருஷனுக்குரியது.
- இவை அனைத்தும் பிரபஞ்ச ஜீவனுக்குரியது.
- பிரபஞ்சம் முழுவதும் "உடல்" பரவ அந்த ஜீவன் பூவுலகில் உடலில் பரிணாம வளர்ச்சி பெற வேண்டும்.
- **வேத அமரத்துவம் பெற்றபின் பெறக்கூடிய சித்தியது.**
- ஆத்மா **(Soul)** பிரம்மத்தை **(Self)** பிறப்பிற்கு முன்னும் சிருஷ்டிக்கு முன்னும் அறிவது வேதம் கூறும் அமரத்துவம்.
- இது சூட்சும உடலில் பெறுவது.
- இதைப் பெறும் தகுதி சூட்சும உலகில் ஆத்மா **(Soul)** தங்கி பூவுலகில் பெற்ற அனுபவங்களைத் தன் சூட்சுமப் பொருளில் கிரகித்துக் கொள்ள வேண்டும்.

- இதை உடல் உயிரை விட்டுப் பிரிந்த பின்னரே சாதிக்க முடியும்.
- இதற்குமுன் எழுவகை அஞ்ஞானம் எழுவகை ஞானமாக மாற வேண்டும்.
- பாதாளமும், பரமாத்மாவும் மனிதனில் இணைந்து புது ரூபம் பெற்று, பரிணாமத்தால் உயர்ந்து சுப்ரீம் — புருஷோத்தமனுடன் — ஐக்கியம் பெற வேண்டும்.
- தெய்வீக ஆன்மா வாழ்வை ஊடுருவி பாதாளத்தை ஏற்பது முதற்படி.
- ஜீவாத்மாவே முடிவு, பரமாத்மாவே முடிவு என்பதை மாற்றி அவையிரண்டையும் உட்கொள்ளும் பிரம்மமே முடிவு என்பது இப்பாதையின் ஆரம்பம்.
- அன்னை 1914-இல் வந்தபொழுது கீதையின் யோகத்தை முடித்தவர்.
- பகவான் அவருக்கு மௌனம் கொடுத்தார்.
- 1926-இல் பகவான் தனிமையை முழுமையாக நாடியபொழுது பகவான் சாதகர்கள் யோகத்தை மேற்கொண்டார். **Mother** ஆசிரம வேலைகளை ஏற்றார்.
- அந்த வேலைகளைச் செய்ய, ஆசிரமத்தில் 150 சாதகர்கள் வரும்வரை அவர்கள் எண்ணங்களைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.
- 1950-இல் வேலையையும் யோகத்தையும் பகவான் ஆதரவின்றிச் செய்தும் பகவானைக் கடந்து யோகம் செய்த பொழுது அவரே புதுப்பாதையை ஏற்படுத்த வேண்டிய நிலையில் அவர் உடல் ஓலம் எடுத்தது.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

யோகம் தானே தன்னை மனிதனில் பூர்த்தி செய்ய
மனிதன் இலட்சியங்களைக் கைவிட வேண்டும்.



## வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

12. இரகசியமான விஷயங்களை இரகசியமாகவே வைத்திருக்க வேண்டும். நம்பிக்கைக்குத் தகுதியில்லாதவரை நம்புவதும் தவறு. அதே சமயத்தில் நம்ப வேண்டியவர்களை நம்பாமலிருப்பதும் தவறு.

இதமாகக் காரியம் முடிவதற்கு இன்றியமையாத சாதனம் இரகஸ்யம். இன்றுவரை சிருஷ்டியின் இரகஸ்யம் இரகஸ்யமாகவே உள்ளது. ரிஷிகள் உட்பட எவரும் சிருஷ்டியை அறிந்ததில்லை. வாழ்வு செயல்களாலானது. செயல் என்பது காரியம். எந்தக் காரியம் கூடி வரவும் இரகஸ்யம் முக்கியம். உயர்ந்தவை மறை எனப்படும். மறைந்த பொருளுடையது மறை, வேதம் எனப்படும். தாழ்ந்தவரிடையே செயல்படும் பொழுது மறைக்கத் தெரியாதவனுக்கு ஒரு காரியமும் கூடி வாராது. சொத்து, திருமணம் வாழ்வில் முக்கியம். நல்ல சம்பந்தம் வந்தபொழுது ஒரு வார்த்தை பெண் பார்க்க வருபவரிடம் கூறிவிட்டால் சம்பந்தம் முறிந்துவிடும். பணம், சொத்து, வரவு, செலவு ஆகும் பொழுது ஆகாதவர் அடுத்தவரிடம் ஒரு தவறான செய்தியைக் கூறிவிட்டால் காரியம் கெட்டுவிடும். ஊரில் நல்லெண்ணமுள்ளவர் குறைவு. கெட்ட எண்ணமுள்ளவர் உண்டு. அவர்கள் செயல்படுவதைத் தடுக்க முடியாது. விவரம் தெரிந்தவர் அனைவரும் முக்கிய காரியம் முடியும்வரை, கூடியவரை வெளியில் சொல்லமாட்டார்கள். நமக்கு ஆகாதவருண்டு. நல்ல காரியத்திற்கு ஆகாதவர் பலர் உண்டு. காற்று எங்கும் பரவியுள்ளதுபோல் வதந்தி நிரம்பியுள்ளது. அதிலிருந்து தப்பாமல் பெரிய காரியங்களைச் செய்ய முடியாது. எவரை விலக்க நாம் முயல்கிறோமோ அவருக்கு நம் செய்தி "தெரியும்" சரியான நேரத்தில் எதிர்ப்படுவார். விலக்குவது அரிது. அதனால் இரகஸ்யம் அவசியம். முழு இரகஸ்யமும் முழுமையாகத் தோற்கடிக்கப்படும் திறமை நிலவியுள்ள இடத்தில் இரகஸ்யமில்லாதவரால்

எதையுமே செய்ய முடியாது. இரகஸ்யம் அவசியம், அத்தியாவஸ்யம்.

- இரகஸ்யம் இறைவனின் புனித உருவம்.
- காரியம் இரகஸ்யத்தைப் போற்றும்.
- நேரமும், காலமும் இரகஸ்யத்தின் அவசியத்தை அறிந்தவை.

வாழ்வு இரகஸ்யத்திற்குரியது. எனவே மனிதன் இரகஸ்யத்தைப் புறக்கணிக்க முடியாது. அளவு கடந்து திருடும் கணக்குப்பிள்ளை இளைஞனான முதலாளியைப் பக்குவமாகத் திருப்தி செய்ய முடிகிறது. திருமணமானால், மனைவி வந்தபின் தன் சாதூர்யம் செல்லாது எனத் தெரியும். பெண்வீட்டார் ஏறிய பஸ்ஸில் அவனும் ஏறி “நீங்கள் பெரிய சொத்தை நம்பி பெண் கொடுக்க முன் வருகிறீர்கள், சொத்தே அவருடையதல்ல” என்றான். சம்பந்தம் தவறிவிட்டது. பாங்க் பெரும் தொகை வழங்கும் பொழுது ஊர் முழுவதும் கவனமாக இருப்பார்கள். “ஆபத்தான” செய்தியை ஏஜெண்ட்டிற்கு வழங்குவர். கடன் ரத்தாகிவிடும். காரியத்திற்கு ஜீவன் உண்டு. தன் விஷயத்தை அது வெளியில் கூறப் பிரியப்படாத நேரமுண்டு. அதுபோன்றவற்றை வெளியிட்டால் காரியம் வாடிவதங்கும், கெட்டுப் போகும். நாம் வணங்கும் அன்னையைப்பற்றி அனைவரிடமும் பேச முடியாது. எவராவது அர்த்தமற்ற சொல்லைச் சொல்லிவிட்டால், அந்தராத்மாவில் உறையும் அத்தெய்வம் பாதிக்கப்படும். அதனால் அன்பரல்லாதவரிடம் அன்னையைப்பற்றிக் கூற முடியாது. ஆழ்ந்த அன்புள்ள இளைஞன் தான் விரும்பும் பெண்ணை எவரிடமும் குறிப்பிட விரும்ப மாட்டான். அது புனிதமானது. புறத்தில் செயல்படுவதில்லை. அர்த்தமற்றவரே அதைப்பற்றிப் பேசுவர்.

அதே நேரம் நம்பிக்கைக்குரியவரிடம் இரகஸ்யத்தைச் சொல்வது அவசியம். அப்படிச் சொல்லாவிட்டால், அவர் மனம் புண்படும். காரியமும் அதை விரும்பும். சொல்லாத நேரம் காரியம் மனம் வருந்தும்.

- இரகஸ்யம் புனிதமான ஆன்மிகச் செயல்.
- அது ஆத்மாவுக்குரியது.
- மௌனம் ஆன்மிக இரகஸ்யம்.



சொல்ல வேண்டியவரிடம் சொல்லாததும், சொல்ல வேண்டாதவரிடம் சொல்வதும் முறையல்ல. முறை மனிதனுக்கும், காரியத்திற்கும், அது சம்பந்தப்பட்ட நேரம், காலம், இடத்திற்கும், அதற்கேயுரிய பாங்கிற்கும் உண்டு. முறை முக்கியம். ஏனெனில் முறை மூலத்திற்குரியது. மூலம் பிரம்மம். அது தெய்வீகமானது. அதற்குரிய மரியாதை தரப்பட வேண்டும். இரகஸ்யத்தைக் காப்பாற்றுவதும், காப்பாற்றாததும் மனிதனுடைய செயல். மனிதனே மையம். மையம் செய்யும் முடிவே முடிவு. இரகஸ்யம் ஆன்மிகப் புனிதமுடையதானாலும் மனிதன் அதைவிட முக்கியம். அதனால் மனிதன் எப்படி இரகஸ்யத்தைக் கையாள்கிறான் என்பது முக்கியம். சிதம்பர இரகஸ்யம் என்ற சொல் சிதம்பரத்தில் வழங்குவது. முக்கியமானது, மூலத்திற்குரியது இரகஸ்யம் என்றாகும்.

வாய் ஓயாமல் பேசும் நண்பனும் முக்கியமான விஷயங்களைக் குறிப்பாலும் உணர்த்தமாட்டான். இப்பண்பை ஒருவனுக்குத் தருவது குடும்பமே. குடும்பம், ஜாதி, பெண், மனைவி, ஊர், பணம் ஆகியவை நுட்பமானவை. நுட்பமானவற்றை நுணுக்கமாகக் கையாள வேண்டும். போரை வெல்வது, நாட்டை ஆள்வது, தவம் பலிப்பது, உலகத்திற்குரிய சேவையை இறைவன் கருவியாக வழங்குவது, ஊருக்கு வரும் ஆபத்தை விலக்குவது, சிற்றூர் தலைநகராகும் ஆன்மிக வாய்ப்பை தம் தபோவலிமையால் பெற்றுத் தருவது, காவல்காரன் பெண்ணை முதலாளி மகன் மணப்பது, நேற்றுவரை தொண்டனானவன் இன்று ஊருக்குத் தலைமை வகிப்பது போன்ற பெரிய நுட்பமான செயல்களில் இரகஸ்யம் இன்றியமையாதது. நாளை பிரதமர் நம்மூர் குடியானவன் வீட்டில் சாப்பிடப் போவதை ஏற்பாடு செய்யும் மந்திரிக்கும், கலெக்டருக்கும் இந்த இரகஸ்யத்தின் சிறப்பு தெரியும்.

**அடுத்த ஒரு மணி நேரத்தில் அன்னை நெஞ்சில் உதிக்கும் நேரம் இரகஸ்யத்திற்குரிய நேரம்.**

(தொடரும்)

# தனித்தன்மையும் அதற்குரிய அடையாளங்களும்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மூலம்: ஸ்ரீ கர்மயோகி

விரிவாக்கம் & சொற்பொழிவு ஆற்றியவர்: திரு. N. அசோகன்

சொற்பொழிவு ஆற்றிய தேதி: 24.04.2015

***1. தன்னம்பிக்கையும், தன்னைச் சார்ந்திருத்தலும்* (Self-confidence and Self-Reliance):** தனித்தன்மையின் முக்கியமான அம்சங்களாக நாம் இவ்விரண்டையும் சொல்லலாம். இந்த இரண்டு அம்சங்களும் இல்லாமல் தனித்தன்மையைக் கொண்டுள்ள எவரையும் நாம் பார்க்க முடியாது. மேலை நாடுகளின் அபார சுபிட்சத்திற்கு முக்கிய காரணமே அவர்கள் தம்மேல் கொண்டுள்ள அபார தன்னம்பிக்கைதான். இந்தியா போன்ற நாடுகளில் அந்தளவிற்கு சுபிட்சமில்லாமல் போனதற்கு முக்கியக் காரணம் அதே தன்னம்பிக்கை இங்குக் குறைவாக இருப்பதுதான். முப்பது மில்லியன் ஆங்கிலேயர்கள் முந்நூறு மில்லியன் இந்தியர்களை நூறு ஆண்டுகட்கு மேலாக அடிமையாக வைத்திருந்தார்கள் என்றால், அதிலிருந்தே நமக்குத் தன்னம்பிக்கை இல்லை என்பது தெரிகிறது. நாலுபேரால் முடியாத காரியம் என்று ஒன்றிருந்தால் அது நம்மாலும் முடியாது என்று நாம் சர்வ சாதாரணமாக எடுத்துக் கொள்கிறோம். ஆனால், மேலை நாட்டவர்கள் இவ்வாறு சிந்திப்பதே கிடையாது. நாலுபேரால் முடியாவிட்டால் என்ன? என்னால் முடியும் என்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள். இப்படி அவர்கள் நினைப்பதற்குக் காரணமே அவர்களுக்கு இருக்கின்ற தன்னம்பிக்கைதான். வானத்தில் பறக்கும் விமானத்தை எவரும் கண்டுபிடித்ததில்லை என்றபொழுது அது எவராலும் முடியாது என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால் இதேநிலையிலுள்ள அமெரிக்கர்கள் வேறுவிதமாக நினைத்தார்கள். யாரும் இதுவரையிலும் கண்டுபிடிக்காவிட்டால் என்ன, நான் கண்டுபிடித்துக் காட்டுகிறேன் என்று அமெரிக்கர்களான ரைட் சகோதரர்கள் பத்து வருடங்களுக்கு மேலாக பரிசோதனைகள் பலவற்றைச் செய்து இறுதியில் 1903-ஆம் ஆண்டு மனிதனாலும் பறக்க முடியும் என்று



நிரூபித்தார்கள். இத்தகைய தன்னம்பிக்கையை இந்தியர்களிடம் நாம் காண்பதே அரிது. யாரும் இதுவரையில் செய்யாத தொழிலில் நல்ல லாபம் இருக்கிறது. அதனால் நீங்கள் ஏன் செய்யக்கூடாது என்று ஒரு இந்தியரைக் கேட்டால், அது எப்படி யாரும் செய்யாத தொழிலை நான் செய்வது, யாரேனும் முதலில் செய்ய வேண்டும், பின்தான் நான் செய்வேன் என்றும், யாரும் முயற்சி செய்யாத தொழிலில் நான் எப்படி இறங்குவேன், அது சரி வராது என்றும் மறுப்பார்கள்.

கடலூருக்கு அருகில் உள்ள ராமாபுரத்தில் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் மதர் எஸ்டேட் என்ற பெயர் கொண்ட முந்திரி எஸ்டேட்டை வாங்கினார். அங்கே முந்திரி காடுகளை அகற்றி பெரிய அளவில் வாழை பயிரிட்டு தண்ணீர் பாய்ச்சுவதற்காக ஆழ்துளைக்கிணறு போட்டார். அதைப்பின்பற்றி அந்த ஊர் கிராமவாசிகளும் அதையே செய்வார்கள் என்று எதிர்பார்த்தார். ஆனால் யாரும் எதையும் செய்யவில்லை. அவருக்கு ஒன்றும் புரியவில்லை. கிராமவாசிகளை அணுகி "நான் இவ்வளவு ஏக்கரில் வாழை பயிரிட்டுள்ளேனே, என்னைப் பின்பற்றி ஏன் யாரும் வாழை பயிர் செய்யவில்லை" என்று இவர் வினவினார். அதற்கு அவர்கள் அளித்த பதில் என்னவென்றால், "நீங்கள் வெளியூர்க்காரர், பணபலம் மிகுந்தவர். அப்படி இருக்கும்பட்சத்தில் நீங்கள் செய்வதை எல்லாம் நாங்கள் செய்ய முடியுமா? எங்க ஊர்க்காரர் இதைச் செய்தால் அதன் பிறகுதான் இதை எங்களாலும் செய்ய முடியும் என்று நம்புவோம்" என்று பதிலளித்தார்கள். அதன்பின் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் அவ்வூர் விவசாயி ஒருவரைப் பார்த்து அவரை ஒரு **bore well** போடுமாறும் அது தவறினால் செலவைத் தாமே ஏற்றுக் கொள்வதாகவும் கூறி தைரியப்படுத்தியதில் அவர் துணிந்து போட்டார். அதில் தண்ணீர் கிடைத்து, அதை வைத்துகொண்டு அவர் வாழை பயிரிட்டதைப் பார்த்தபின் மற்ற விவசாயிகளும் **bore well** போட்டு வாழை பயிரிட முன்வந்தனர். இந்தளவிற்கு நம்முடைய தன்னம்பிக்கை அடுத்தவரைப் பொறுத்துள்ளது. வ.உ.சி. அவர்கள் கப்பல் கம்பெனி ஆரம்பித்தபொழுது அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் பல்கலைக்கழகம்

ஆரம்பித்தார். தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் அவரை அதிசயமாகப் பார்த்தனர்.

**Self-confidence** மற்றும் **Self-reliance**-ல் அமெரிக்கர்களுக்கு நிகராக வேறுயாரும் இருக்க முடியாது. நாம் எல்லாவற்றிற்கும் குடும்பத்தின் ஆதரவையும், உற்றார் உறவினரின் ஆதரவையும், அரசாங்கத்தின் ஆதரவையும் எதிர்பார்த்திருக்கிறோம். ஒரு இந்திய இளைஞன் திருமணம் செய்தால், வரதட்சணையாக வரும் பணத்தை வைத்துக் கொண்டு ஏதேனும் தொழில் செய்யலாமா என்று பார்ப்பான். அப்படி வரதட்சணையை வைத்துத் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது அவனுக்கு மரியாதைக் குறைவாகத் தெரியவில்லை. பட்டப்படிப்பு முடித்து கல்லூரியை விட்டு வெளிவந்தவுடன் அரசாங்கம் தனக்கு வேலை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறான். எத்தனையோ விதமான அரசுச் சலுகைகளை பொதுமக்கள் அனுபவித்துக் கொண்டுள்ளனர். விவசாயிகள் கடன் வாங்கிப் பயிர் செய்தால், கடனைத் திருப்பித்தராமல் அரசு கடனைத் தள்ளுபடி செய்யுமா என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், இதே விஷயங்களில் அமெரிக்கர்கள் நம்மைப்போல் நடந்து கொள்வதேயில்லை. அவர்கள் யாருடைய ஆதரவையும் நம்பி அவர்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில்லை. தன்னுடைய சொந்த உழைப்பு, திறமை இவைகளை மட்டுமே நம்புவார்கள். வரதட்சணை கோரிக்கை வைப்பது அமெரிக்க இளைஞர்கள் அறியாத ஒன்றாகும். நமக்கு நிதியுதவி தேவைப்பட்டால், நாம் தயங்காமல் உற்றார், உறவினர்களிடம் வாங்கிக் கொள்கிறோம். ஆனால் அமெரிக்கர்கள் இவ்வாறு செய்வதில்லை. நாம் லட்ச ரூபாய் ஒருவரிடம் கடன் வாங்கும்போது அவர்கள் உறவினர்களிடம் நூறு டாலர் கடன் வாங்க மிகவும் தயங்குவார்கள். தந்தையார் கோடீஸ்வரராக இருந்தாலும், பிள்ளை தனக்கு அவர் இலவசமாக ஒரு தொழில் அமைத்துத் தரவேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை. கடனாக ஒரு தொகையை வாங்கி, சொந்தமாக ஒரு தொழிலை அமைத்து அதில் லாபம் பார்த்து, அந்தக் கடனை திருப்பித்தர வேண்டும் என்றுதான் எந்த



அமெரிக்க இளைஞனும் விரும்புவான். நம் நாட்டில் தொழில் முனைவோருக்கு அரசாங்கம் வங்கிகளின் மூலம் பலவிதமான சலுகைகளை வழங்குகிறது. ஐந்து கோடி ரூபாய்க்கு ஒருவர் தொழில் திட்டம் தீட்டினால்கூட திட்டம் தீட்டியவர் 10% **margin** கொடுத்தால் போதும் மீதி தொகையை வங்கி கொடுக்கும் என்ற அளவிற்கு நம் நாட்டில் தொழில் முனைவோருக்கு வங்கிகளின் ஆதரவு உள்ளது. இது அமெரிக்கர்கள் கேட்டறியாத ஒன்று. இப்படி ஒரு ஐந்து கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டி எந்த ஒரு அமெரிக்க இளைஞனும் எந்த ஒரு அமெரிக்க வங்கியிலும் 10% **margin** கொடுத்து மீதித் தொகை கடனாக வாங்க முடியாது. அவர் தன்னுடைய சொந்தத் திறமையில் சிறிய அளவில் தொழில் ஆரம்பித்துக் கொள்ள வேண்டும். அந்தத் தொழிலை அவர் படிப்படியாக வளர்த்து, ஐந்து கோடி பெறுமான அளவிற்கு அதை விரிவுபடுத்த வேண்டுமே தவிர, நேரடியாக வங்கியின் ஆதரவை வைத்துக்கொண்டு பெரிதாக எதையும் தொடங்கிவிட முடியாது.

நம்மிடம் காணப்படாத **self-reliance** இந்தளவிற்கு ஏன் அமெரிக்கர்களிடம் காணப்படுகிறது என்பதையும் நாம் ஆராயவேண்டும். அடிப்படையில் இந்தியர்களின் வாழ்க்கை கூட்டு வாழ்க்கை. அதாவது **collective life.** அப்படிப்பட்ட நம் வாழ்க்கையில் சிரமமோ நெருக்கடியோ ஆபத்தோ வந்தால், ஆதரவு தர உற்றார் உறவினர்கள் இருக்கிறார்கள். ஜாதி சங்கங்கள் உள்ளன. பொதுவாக உள்ளூர் ஆதரவு உள்ளது என்று நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். வசதி குறைந்த ஒருவர் தம் மகளுக்கு எப்படித் திருமணம் செய்வது என்று கவலைப்படும் பொழுதெல்லாம் அவர் அண்ணன் வசதி மிகுந்தவராக இருந்தால், நான் இருக்கிறேன், பார்த்துக் கொள்கிறேன், கவலை வேண்டாம் என்று சொல்வதுண்டு. கிராமத்தில் ஒரு விவசாயி நிலத்தில் அத்துமீறி ஒருவர் நுழைந்தால், மாடு விட்டு மேய்த்தால், அவருடைய நிலத்தின் எல்லையை இரண்டடி இவருடைய நிலத்திற்குள் கொண்டுவர முயற்சி செய்தால், அதன் காரணமாக தகராறு எழும்போது இவருக்கு ஆதரவாக செயல்படுவதற்கு அதே கிராமத்திலுள்ள

உற்றார் உறவினர்களைக் கூப்பிடுவதுண்டு. ஆபத்திற்கு உதவ உற்றார்கள் இருக்கிறார்கள் என்று தெரியும்போது, மற்றவர்களும் வீண் தகராற்றை எழுப்ப மாட்டார்கள். ஒருவர் உடம்பிற்கு வந்து படுத்துவிட்டால், மருத்துவமனையில் **admit** செய்து குணமாகும்வரை கூட இருந்து பார்த்துக் கொள்ள உற்றார் உறவினர்கள் உதவிக்கு வருவார்கள். இப்படிப்பட்ட உறவினர்கள் ஆதரவு என்பது அமெரிக்கர்கள் கேட்டறியாத ஒன்று. 16-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் அமெரிக்கா வந்து குடியேறியபோது அந்த நாடு வெறும் வனாந்திரமாக இருந்தது. அந்நிலையில் குடியேறியவர்கள் எல்லா வேலை-களையும் தாங்களேதான் செய்ய வேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்தனர். பயிர் செய்தால் அதை அறுவடை செய்யும்வரை பயிரைப் பாதுகாக்க உதவிக்கு ஆட்கள் இல்லை. திருட்டோ, கொள்ளையோ நடந்தால் பாதுகாப்பு தர காவல்நிலையங்கள் இல்லை. தன்னையும், தன் உடமையையும் பாதுகாத்துக் கொள்ள அவரவர் துப்பாக்கியும் கத்தியும் வைத்திருக்க வேண்டியதாயிற்று. உடம்பிற்கு வந்து படுத்துவிட்டால் உதவுவதற்கும் ஆட்கள் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் வாழ்ந்து பழகிய அமெரிக்கர்களுக்கு இது நன்றாகப் பழகியபடியால், இதையே வழக்கமாக வளர்த்துக் கொண்டு-விட்டனர். இன்று அந்நாடு செல்வச் செழிப்புடன் இருந்தாலும், நாட்டின் ஆரம்பகால வாழ்க்கை இப்படி இருந்ததால், இதனால் ஏற்பட்ட பழக்கங்கள் நன்கு வேரூன்றி விட்டன. நம் நாட்டினருக்கு ஆரம்பத்திலிருந்தே கூட்டுக் குடும்ப வாழ்க்கை பழகிவிட்டதால், அப்போதே நாம் கற்றுக்கொள்ளாத **self reliance** இன்று நகர வாழ்க்கை ஏற்பட்டபின்னும் அவரவர் வருமானத்திற்கு அவரவரே பொறுப்பு என்ற நிலைமை உருவாகியபின்னரும், பழைய பழக்க வழக்கங்கள் இன்னும் விடாமல் தொடர்கின்றன. நம் நாட்டுப் பெண்கள் சிலருக்கு இன்னும் சொந்தமாக முடிவு எடுக்கத் தெரியாது. எல்லாவற்றிக்கும் கணவனையே முடிவு எடுக்கச் சொல்வதால், எதற்கு எடுத்தாலும் அவரையே ஒரு வார்த்தை கேட்க வேண்டும் என்பதை நாம் பார்க்கிறோம். இந்தியாவிலிருந்து



சென்று அமெரிக்காவில் வசிக்கும் பல பெண்களுக்கு இப்பழக்கம் இருப்பதால் இது அமெரிக்கர்களுக்கு அதிருப்தியைத் தருகிறது. அங்கு வசிக்கும் இந்தியப் பெண் ஒருவர் ஒரு பல் மருத்துவமனைக்குப் போனார். இவருடைய பல்லைப் பரிசோதித்த மருத்துவர் இவருடைய ஒரு பல் வீணாகிவிட்டது, அதைப் பிடுங்கிவிட்டு வேறு பல் பொருத்துகிறேன், அதற்கு $2000 ஆகும், சம்மதமா என்று கேட்டார். அதற்கு அவரால் உடனடியாக பதில் சொல்ல முடிய-வில்லை. தன் கணவர் இதற்கு அனுமதிப்பாரா என்ற கேள்விதான் வந்தது. ஆகவே அவர் தயக்கத்துடன் தன் கணவரை ஒரு வார்த்தை கேட்டபின் சொல்கிறேன், இரண்டு நாட்கள் அவகாசம் கொடுங்கள் என்று கேட்டார். அந்த அமெரிக்க டாக்டருக்கு ஒன்றுமே புரியவில்லை. மிகவும் ஆச்சரியப்பட்டுவிட்டாராம். இதற்கு நேர் எதிர்மாறான அனுபவத்தை வெள்ளைக்காரப் பெண்ணின் கோணத்தி-லிருந்து பார்த்தால், இந்தியப் பெண்ணிற்கும், வெள்ளைக்கார பெண்ணிற்குமுள்ள வித்தியாசம் தெரியும். **P&P**-யில் எலிசபெத்தையும், டார்சியையும் எடுத்துக் கொள்வோம். அவள் ஆரம்பத்தில் அவனை நிராகரிக்கிறாள். அது அவளாக எடுத்த சொந்த முடிவு. அவனுடைய திருமண வாய்ப்பை ஏற்க வேண்டுமா அல்லது நிராகரிக்க வேண்டுமா என்று யாரையும் அவள் கேட்கவில்லை. அப்படி மறுத்தபின்னும் யாரிடமும் அவள் சொல்லவுமில்லை. இது அவள் சொந்த விஷயம் என்று மௌனமாக இருந்தாள். அதே டார்சி இரண்டாம்முறை மீண்டும் திருமண வாய்ப்பு தரும்போது சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறாள். அந்த நேரத்திலும் தாய், தந்தையைக் கேட்க கால அவகாசம் எதுவும் அவள் அவனிடம் கேட்கவில்லை. முன்பு வேண்டாம் என்பது அவள் சொந்த முடிவு. இப்போது வேண்டும் என்பதும் அவள் சொந்த முடிவு. இப்படித் தன் விஷயத்தில் தன்னைச் சார்ந்திருப்பதே தனித்தன்மைக்கு ஒரு முக்கியமான அடையாளமாகும்.

(தொடரும்)

# நிலையான சமர்ப்பணம் – நெடு நாளைய யோகம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

அதை **Pre-occupation** என்கிறோம். அது தீர்ந்தால் **Pre-occupation** போய் விடும். **Occupation** அங்கு வந்து விடும். **Pre-occupation** தெரியும். **Occupation** நமக்குத் தெரியாது. நாம் அதை நம் சுபாவம், பழக்கம் எனக் கொள்கிறோம். **Occupation** என்ற ஆயிரம் சொந்த நம்பிக்கைகள், ஊர் உலக நம்பிக்கைகளிருப்பதை நாம் அறிவதில்லை. அவற்றை விலக்கினால் அதன் அடியில் சுபாவமிருக்கும். உதாரணமாக சைவம் ஆன்மிகம், அசைவம் அதற்கெதிரி என்பது பரவலான அபிப்பிராயம். அடிக்கடி அன்னை இதைச் சுட்டிக் காட்டுவார். சைவம், அசைவம் உணவுப்பழக்கங்கள். அதற்கும் ஆன்மிகத்திற்கும் தொடர்பில்லை. ஏசு மகான். மாமிசம் சாப்பிட்டார். வேத ரிஷிகள் மாமிசத்தை வேள்வியில் பயன்படுத்தினர். வங்காளத்தில் பிராம்மணர்கள் மீன் சாப்பிடுவார்கள். மச்ச பிராம்மணன் எனப்பெயர். குடுமி, பூணூல், உடை, உணவுப் பழக்கம் இவற்றுள் மூட நம்பிக்கை கலந்து வரும். பவுன் இராமகிருஷ்ண பரமஹம்சர் உடலை அவரையறியாமல் தொட்டால் உடல் கூசும். பவுன் தவறானதில்லை, அவசியமானதும் கூட. அவருடைய பழக்கம் காசைத் தொட மாட்டார். *இக்கருத்துகள் எளிதில் புரியாது.* கவனமாக இருந்தால் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியும். **(Occupation, Pre-occupation, Deconditioning** என்பவற்றை தற்சமயம் "நானுள்ள மனநிலை", "என் மனத்தை அரிப்பது", "மனம் தூய்மைப்படுவது" என எழுதிக் கொண்டிருக்கிறேன்.)

மனம் தூய்மையாக இருப்பது எனில் களங்கமற்ற சிறு குழந்தை மனமாக இருப்பது. வளரும் பொழுது மனிதன் வாழ்வின் சுபாவத்தைத் தன் சுபாவமாகப் பெறுவதை விடுவது சிரமம். அப்படி விடுவதை **deconditioning** எனக் கூறுகிறார்கள். நாம் அதை களங்கமற்ற மனம் எனலாம். பதற்றப்படும் மனம் **Pre-occupation**-க்குட்பட்டது. பதற்றமின்றி நிதானமாக இருப்பது **Pre-occupation** இல்லாமலிருப்பது. **Occupation** என்பது



உலகம் வழங்கியதை உள்ளம் ஏற்பது. அது இல்லாமலிருக்க மனம் நிதானமாக இருப்பதுடன் களங்கமற்றும் இருக்க வேண்டும். **Occupation** *இல்லாமல் தூய்மையாக இருக்க ஆசையற்றிருப்பது அவசியம்.* களங்கமற்ற மனம், ஆசையற்ற மனம், பதற்றமற்ற நிதானமான மனம் இப்படி வழக்கில் உள்ளது. இந்நிலைகளைத் தெளிவாக அறிவது யோக நூல்களைத் தெளிவாக அறிய உதவும்.

சமர்ப்பணம் ஆரம்பம் என்றாலும் சமர்ப்பணத்தை அன்பர்கள் அறிவார்களே தவிர பின்பற்றுவதில்லை. *பின்பற்றுபவர்கள் பிரச்சனை வந்தபொழுது பின்பற்றுவார்கள்.* நிலையாக சமர்ப்பணம் இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் இல்லை. அப்படி நினைத்தால் அதை ஆர்வமான தீர்மானமாக மாற்றுவதே இக்கட்டுரை. அம்முடிவை எடுப்பது முடிவை நிறைவேற்றுவதாகாது. அம்முடிவை எடுப்பதும் மனிதனை அன்பனாக்கி, அன்பனை சாதகனாக்கும். *அது யோகப் புனர்ஜென்மம்.* அதனால் அதற்குத் துணையானவை எவை, தடையானவை எவை, எப்படித் தடையைக் குறைத்து விலக்குவது, துணையை வளப்படுத்திப் பயன் பெறுவது என்பதை விளக்கும் கட்டுரையிது. அதில் மனம் தூய்மையாக களங்கமற்றிருப்பது ஒன்று. நிலையான சமர்ப்பணம் உருவான சரணாகதியாகும். சரணாகதி பூர்த்தியானபின் யோகம் ஆரம்பமாகும். சமர்ப்பணம் நிலைத்தபின் சரணாகதி எழும். சரணாகதி மனதில் எண்ணமாகும். இதய உணர்ச்சியாகவும், உடலின் உணர்வாகவும், படிப்படியாக உருவாகும். *சரணாகதி அபிப்பிராயமாகி, பிறகு உணர்வின் நோக்கமாகி, ஜீவனின் நோக்கமாவது* **(attitude of being)** *முடிவான கட்டம்.*

**Opinion** அபிப்பிராயம், **attitude** நோக்கம், **motive** ஆழ்ந்த நோக்கம். குடும்பம் வசதியாக வாழ வேண்டும் என்ற அபிப்பிராயம் எல்லார்க்கும் உண்டு. அது அந்த அபிப்பிராயத்தின் தீவிரத்தால் நிறைவேறும். நமது பல குடும்பங்களில் (பங்காளி, சம்பந்தி) முதன்மையாக வர வேண்டும் என்பது அபிப்பிராயத்தால் நிறைவேறாது. அது நோக்கம் **(attitude)** என்றால் நிறைவேறும். ஓர் அபிப்பிராயத்தை ஆசை

ஏற்றுக் கொண்டு நிறைவேற்றுவது நோக்கம் (**attitude**). எப்படியும் **MLA** ஆக வேண்டும் என்பது அபிப்பிராயம். அது நோக்கத்தால் மட்டும் பூர்த்தியாகாது. அதுவே குறியாக இருந்தால், அதாவது அது *ஜீவனுடைய நோக்கமானால்* அதை **motive** என்பார்கள். **Motive** என்பது மனம், உயிர், உடல், ஜீவன் அனைத்துக்கும் உள்ள நோக்கம். வாழ்வில் ஒரு பெரிய காரியம் பூர்த்தியாக அது **motive** ஆக வேண்டும். அது குறைந்தபட்சம். *சமர்ப்பணம் பலிக்க, நிலைக்க, நிலைத்து சரணாகதியாக, அந்த நோக்கம் அதிகபட்சமாகி தொடர்ந்து வளர வேண்டும்.* அதுவே வள்ளலார் மறந்தறியேன் எனக் குறிப்பிடுவது. பெருந்தலைவர்கள் அவர்கட்குள் வாக்குவாதம் செய்து சண்டையிடுவார்கள் என்பது உண்மையானாலும், நாம் அதை ஏற்க விரும்புவதில்லை. அன்னை **piano** வாசிக்கும்பொழுது சிவனும், கிருஷ்ணனும் வந்து அன்னை வாசிப்பதை அவர்கள் இஷ்டப்படி வாசிக்கச் சொன்னார்கள். அவர்களிருவரும் வாக்குவாதம் செய்தார்கள், சண்டையிட்டார்கள் என அன்னை கூறுகிறார்கள். அதாவது *அன்னைக்குரிய சுமுகத்தில் சிவனுக்கும் கிருஷ்ணனுக்கும் செயல்பட முடியவில்லை.* அன்னையின் சுமுகம் உயர்ந்தது. இதுபோன்ற ஏராளமான செய்திகள் **Agenda**-வில் உள்ளன. அன்பர்கள் சமர்ப்பணம் நிலையானபின் அன்னைக்குரிய சுமுகத்தை மனத்தின் ஆழத்தில் காணலாம். *சமர்ப்பணத்தின் சுமுகம் உயர்ந்தது.* **Opinion** அபிப்பிராயம் சுமுகத்தைத் தடுக்கும். நோக்கம் **attitude** காரியத்தை அதிகமாகப் பூர்த்தி செய்யும். பிறருடனுள்ள சுமுகத்தை அதிகப்படுத்துவதால் காரியம் அதிகமாகக் கூடி வரும். **Motive** ஜீவனின் நோக்கம் அனைவருடனும் சுமுகமாக காரியத்தை அதிஅற்புதமாகப் பூர்த்தி செய்யும். சமர்ப்பணம் நிலையானால் சுமுகம் மட்டுமேயிருக்கும். உள்ளும் புறமும் சுமுகம் ஜனித்து வளர்ந்து பரவுவதால் *காரியம் காலத்தைக் கடந்து பூர்த்தி பெறும்.* யோகம் காரியங்களைக் கடந்தது. காரிய சித்தி மனிதனுக்குரியது. சாதகன் அதைக் கடந்தவன். சாதகன் ஒருவனிருப்பதால் அவன் சூழலில் காரியம் தன்னைத்தானே பூர்த்தி செய்து கொள்ளும். அதனால் நிலையான சமர்ப்பணம் நிரந்தரமான யோகமாகும்.



"*ஆண்டி மடம் கட்டியது போல்*" என்ற வழக்கு எதுவுமேயில்லாதவன் எல்லாவற்றையும் சாதிக்க விரும்பும் மனநிலையைச் சித்திரிக்கிறது. உலகம் இதைக் கேலி செய்யலாம். ஆன்மிக ரீதியாக இது பெரும் நோக்கம். *நிலையான சமர்ப்பணம் ஆண்டிக்கு மடம் போல.* சமர்ப்பணம் முதல் நிலை யோகம் என்றாலும் அதற்கும் முந்தைய நிலை மௌனம். விஷ்ணு லீலி பகவானுக்கு மௌனம் பெறும் வழியைக் கூற "கண்ணை மூடினால் எண்ணம் உள்ளே வரும். அதைத் தூர எறி" என்றார். *அது நடக்க மனத்தில் ஓரளவு மௌனம் தேவை.* நமக்கு அதுவே இருக்காது. வரும் எண்ணத்தை ஏற்பது மனம். மறுப்பது, மறுத்து விலக்குவது, மௌனப் பயிற்சி. எரிச்சல்படாமலிருப்பது எழும் எரிச்சலை ஏற்காத மனநிலை. இது பெரிய ஆன்மிக வலிமை. ஏற்காதது முதல் நிலை. மறுப்பது பெரு நிலை. இது மௌனத்தில் முதல் நிலை. லீலிக்கு எண்ணம் மறுக்கப்பட வேண்டும். *பூரண யோகத்திற்குரியது, எண்ணம் சமர்ப்பணம் செய்யப்பட வேண்டும்.* எண்ணம் ஒருமுறை சமர்ப்பணமானால் *அகண்ட மௌனம் தென்படும்.* அகண்ட மௌனம் பூண்பது ஆன்மிக சித்தி. சித்தி பெரியது, கிடைத்தற்கரியது என்றாலும் முயற்சி தொடர வேண்டும். இடைவெளியின்று மனம் மௌனத்தை, சமர்ப்பணத்தை நாட வேண்டும்.

**Pygmalion** என்பது பெர்னாட்ஷா எழுதிய நாடகம். எலிசா என்ற படிக்காத ஏழைப்பெண்ணை புரொபசர் ஹிக்கின்ஸ் (**Pronunciation training**) பேச்சுப் பயிற்சி ஆறு மாதம் கொடுத்து படித்த சீமாட்டி போல் பேச வைக்கிறார். இது ஒரு அற்புதம். உலகில் பல இடங்களில் எவர் கண்ணிலும் அதிகமாகப்படாமல் நடக்கிறது. *பயிற்சியின் சிறப்பை வெளிப்படுத்தும் கதையிது.* ஹிக்கின்ஸ் மழைக்கு ஒதுங்கிய கட்டடத்தில் வந்தவர், அனைவர் பேசுவதையும் எழுதுகிறார். அவர்கள் பேச்சிலிருந்து அவர்கள் பிறந்த இடத்தைக் கூறுகிறார். இந்தியாவிலிருந்து திரும்பிய கர்னல் பிக்கரிங் இதைக் கண்டு வியக்கிறார். ஆங்கிலத்தில் **vowels** உயிரெழுத்து ஐந்து. இதை ஐம்பதுவிதமாக உச்சரிக்கின்றனர். பிக்கரிங் அவற்றுள் 53 வகையை அறிவார். ஹிக்கின்ஸ் 156 முறைகளை அறிவார். வாழைப்பழம் என்பதை

வாளைப்பளம் என்று ஒருவர் கூறினால் அவர் திருநெல்வேலியில் பிறந்தவர் என நாம் அறிவது போல் ஹிக்கின்ஸ் உலகில் எங்கு எத்தனைவிதமாக ஆங்கிலம் பேசப்படுகிறது என ஆராய்ச்சி செய்தவர். சூட்சும மனம் இவற்றையறியும். கால் கட்டை-விரலைக் கண்டு அவர் முழு உருவத்தைச் சித்திரித்ததாகக் கூறுகின்றனர். வெண்ணொளியை வானவில் ஏழாகப் பிரிக்கிறது. கம்ப்யூட்டர் 60 இலட்சம் கலராகப் பிரிக்கிறது. *பிரிப்பது கலை. பிரித்ததை அறிவது ஞானம்.* இந்திய ஆன்மிகம் இது போல் பெற்ற பேறுகள் ஏராளம். பகவான் கூறும் **integration** இணைவது பிரிந்தவை கூடும் வகை. அனந்தமாகப் பிரிந்த செயல்கள், குணங்கள், சொற்களை யோகம் அறிய உதவும். *அத்துடன் யோகம் அவை இணைவதையும் அறியும்.* உலகில் அனைத்துச் செயல்களும் அதுபோல் இணைந்துள்ளன, **integrate** ஆகியுள்ளன. அதாவது ஒரு சிறிய விஷயத்தை அசைப்பதால் ஒரு பெரிய காரியத்தைச் சாதிக்கலாம். *சிறு அசைவு முழு உலகையும் அசைப்பது இணைந்த ஒருமை* **integration.**

யோகம் முழுவதும் சித்தித்தால் உலகை நகர்த்த முடியும். சமர்ப்பணம் சிறியது. சமர்ப்பணம் நமக்குத் தெரியவில்லை-யெனினும் எவ்வளவு பெரிய காரியத்தையும் பூர்த்தி செய்யும். *சமர்ப்பணம் பூர்த்தி செய்ய வேண்டியது யோகம்.* சமர்ப்பணம் நிலைக்க அது சொல்லைக் கடக்க வேண்டும். சொல் கடந்த நிலை மௌனம். நாமறிவது மனம் பெற்ற மௌனம். அதைக் கடந்தது ஆத்மா ஏற்கும் மௌனம். மனிதன் மண்ணாங்கட்டி என்பது உண்மை. *மனிதன் ஆத்ம விழிப்புடையவன் என்பதும் உண்மை.* நமக்கு இருப்பதே நமக்குத் தெரியும், இல்லாததற்கு நாம் என்ன செய்ய முடியும். **The Life Divine** முதல் அத்தியாயம் விடாமுயற்சியைக் கூறுகிறது. *நாம் எந்த நிலையிலிருந்தாலும் அந்த நிலைக்குரிய அதிகபட்சம் குறைந்தபட்சம் உண்டு.* மேலும் நாம் குறைந்தபட்சத்தைத் தேர்ந்தெடுத்தாலும் அந்நிலைக்குரிய அதிகபட்ச முயற்சி தேவை. ஏனெனில் அதிகபட்சம் அனந்தம். இதை **Sincerity** உண்மையென அறிய வேண்டும். மீண்டும் கூறினால் உலகம் ஏற்பட்ட உடனே ஆத்மா விழிப்புற்றது. அது அனந்தம். ஆத்மாவின் அனந்தத்தை மனிதனுடைய அனந்தம்



அடையும். எனவே **Sincerity** முக்கியம். விழிப்பு என ஏற்பட்டபின் அது ஆத்ம விழிப்பானால், அவன் மரபில் அறிந்ததை விட்டு விலகி பகவான் ஸ்ரீ அரவிந்தரை ஏற்றபின் எந்தப் பாதையும் இலக்கில் முடியும். அதுபோன்ற பாதைகளைப் பலவகையாகக் கூறலாம். **The Life Divine** கூறுவது ஒரு பாதை, சாவித்ரி கூறுவது ஒன்று, **Synthesis** கூறுவதும் ஒன்று. நமக்குப் புலப்படுவதும் ஒன்று. எதைப் பின்பற்றினால் எவ்வளவு தாழ்வாக ஆரம்பித்தாலும் அந்நிலையிலும் அதிகபட்ச முயற்சியுண்டு. அதை ஏற்பது **Sincerity** உண்மை. **Sincerity**-யை செயல்பட வைப்பது சமர்ப்பணம். சமர்ப்பணம் நிலையாவது அடுத்த கட்டம். தாய் குழந்தைக்கு ஒரு முத்தம் பல முத்தம் தருவதில்லை, முடிந்தவரை கொடுப்பாள். சமர்ப்பணம் அன்பன் அன்னையின் திருவடிகளை முத்தமிடும் கோலாகல நேரம். நேரம் பெரியதானால், பெரியது வளர்ந்தபடியிருக்கும். வளர்ச்சி தடைபடாதது அனந்தம். அனந்தம் அனந்தமாக வளர்வது யோகம்.

பகவான் ஞானம், பக்தி, கர்மம் என்ற தலைப்புகளில் 500 ஆன்மிக சிந்தனைகள் எழுதினார். மேலும் ஒரு 47-ம் பிற்பாடு எழுதினார். அன்னை தம் அனுபவங்களை - கல் விழுந்தது போன்றவற்றை - நூற்றுக்கணக்காக எழுதியுள்ளார். பக்தர் அன்னையை அறிந்தது முதல் ஏராளமான அதுபோன்ற நிகழ்ச்சிகளை அறிவர். *தம் சொந்த அனுபவத்தில் பகவானும் அன்னையும் கூறும் தத்துவங்களை அறிய முயன்றால் முதலிலேயே தெளிவு ஏற்படும்.* ஏற்பட்ட தெளிவில் பலன் உண்டு. தத்துவம் உண்டு, பின்னணியில் அன்னையுண்டு. அன்னையை ஏற்றால், ஏற்றதை நிலையாகப் பெற்றால், அதை நிலையாகப் பெற சமர்ப்பணத்தை நிலையாகப் பெற முயன்றால், *நிலை நிறையாகும். நிறைக்கும் நிலைகள் உண்டு.* நிறைவையும் நாடாத மனநிலை பரவசம். பரவசம் நம்மை மறப்பது. நம்மை மறந்த நிலை பரவசம் ஆத்ம விழிப்பின் முழுமையாவதை *பகவான் விழிப்பில் சமாதியென்கிறார்.* இவை முயலும் அனைவருக்கும் கிட்டுவது. ஆரம்ப நாளில் அதிகபட்ச வசதியாகவும் போகப்போக அதிகபட்ச மனநிம்மதியாகவும் தொடர்ந்த

வளர்ச்சியுண்டு. அறிவு அனுபவம் தரும். அனுபவம் தரும் அறிவு பேரறிவு. இதைத் தெளிவு எனலாம். எந்த விஷயத்திலும் அடுத்த கட்டம் உண்டு. *அப்படி ஏற்படும் தெளிவைக் கொண்டு பழைய அனுபவத்தைப் புரிந்துகொள்ள முயன்றால், ஏற்பது அந்த அளவில் சித்தி*. எந்த ஒரு கருத்தும் தத்துவத்தெளிவைத் தருமா-னால் - உ.ம். மணிக்கொரு சமர்ப்பணம் தருவது இடையறாத நினைவு - அதன்பின் அக்கருத்து முடிவான பலனைத் தரவல்லது. ஞானமே ஞானி நாடுவது. பக்தன் தேடுவது மனத்தின் ஞானமல்ல நெஞ்சின் ஞானம். நெஞ்சு பெற்ற ஞானம் நிலையான முழுமையுடையது. மனம் போல் ஊசலாடாது. உடல் பெற்ற ஞானம் உடனே பலன் தருவது. ஜீவன் தேடும் ஞானம் *க்ஷணசித்தி*. இன்று டெல்லிக்கு நடந்தும், பஸ்ஸிலும், ரயிலிலும், விமானத்திலும் போகலாம். முறைக்-குரிய முயற்சியுண்டு. எப்படிப் போனாலும் இலக்கை-யடையலாம். நடந்து ஓரிரு மாதங்களில் டெல்லி போயடைய-லாம். ஓரிரு வருஷங்களில் அது போல் யோக சித்தி பெறலாம். 10 அல்லது 15 ஆண்டில் பெற்றாலும் அதன் பேறு குறைவ-தில்லை.*இல்லாமலில்லை. பெறாதவர் உண்டு*. நாம் எதையும் நினைக்கலாம். ஆனால் எதையும் செய்வதில்லை. செய்தால் தொடர்வதில்லை. மனிதன் அவன் குறையால் செயல்படலாம், நிறையாலும் செயல்படலாம். நிறையால் செயல்படும் மனிதனுக்கு எதுவும் நிலையாக அமையும்.

பகவான் உள்ளே வரும் எண்ணத்தை மறுத்து மௌனம் பெற்றார் என்றேன். கோபம் வரும்பொழுது கோபத்தைக் கட்டுப்படுத்தினால் கோபம் வெளிப்படாது, உள்ளேயிருக்கும். *வெளியில் கட்டுப்படுத்தியது போல் உள்ளேயும் கட்டுப்படுத்த வேண்டும்*. உள்ளே கோபம் எழாமலிருக்க கோபம் எழும் இடத்தில் நமக்குக் கட்டுப்பாடு வேண்டும். ஏன் கோபம் வருகிறது? இயலாமை கோபம். கோபம் இயலாமையால் எழுந்தால் இயலாமை எழுவது எங்கு? மனஉறுதி செயல்படுவது திறமை. செயல்பட முடியாதது இயலாமை. மன உறுதி உற்பத்தியாகும் இடம் அறிவுடன் உறுதி உடன் உறையுமிடம். அறிவும் உறுதியும் மனத்தில் பிரிந்தும் சத்திய ஜீவியத்தில்



இணைந்தும் உள்ளன. *கோபத்தைக் கட்டுப்படுத்துவது என்பதன் மூலம் சத்திய ஜீவியம்*. லீலி பகவானுக்கு மௌனம் பயிற்றுவிக்கக் கொடுத்தது பலித்தால் பகவானுக்கு பக்தி, நம்பிக்கை அதற்குரிய மௌனம் ஏற்பட்டிருக்கும். அது ஏற்படுவது அப்பயிற்சியின் வெற்றி. பகவான் அவதார புருஷர். அதனால் இந்த எளிய பயிற்சியே அவருக்கு முடிவான ஆன்மிகப்பலனான பிரம்ம ஜீவியத்தை அளித்தது. இப்பயிற்சி பலன் தருவது இம்முறை செயலை தலைகீழே மாற்றுவது. *தலைகீழே மாற்ற அதிகத் திறமை வேண்டும்*. கட்டுப்பாடு என்பதனுள் reversal தலைகீழ் மாற்றம் புதைந்துள்ளது. இராணுவத்தில் முன்னேறும் கட்டம் பெரிய நேரம். தோற்றபின் இராணுவம் சிதையும். சிதையாமல் காப்பாற்ற தளபதிக்கு வலிமை வேண்டும். குடும்பம் வளமான நேரம் அனைவரும் தரும் ஆதரவு வறுமையால் வாடும் நேரம் இருக்காது. அது இருக்க பண்புள்ள குடும்பமாக இருக்க வேண்டும். இராணுவத்தில் அதை ஒழுங்கு குலையாமல் பின் வாங்குவது (orderly retreat) என்பார்கள். *தோற்காதபொழுது பின் வாங்குவது தலைகீழ் மாற்றம்* (reversal). *இது பகவானுக்குரிய முக்கியமான முறை*.

**உள்ளே போ:** மனம், காலம், ஆழம், பிரச்சனை என எந்த வகையாகக் கூறினாலும் சமர்ப்பணம் பூர்த்தியாகும் நிலையை சரிவரக் கூற முடியாது. *அன்பர் தனக்குரிய ஆழத்தை எப்படி அதிகப்படுத்துவது என்பதை அறிய அவர் ஆழத்தைத் தொட்ட பிறகே அறியலாம்*. முழுச் சமர்ப்பணம் நான் பல முறை எழுதியது. இதைச் செயலாலும், உந்துதலாலும், உணர்வாலும், காலத்தாலும் விளக்குவதுண்டு. சமர்ப்பணம் 4 நிலைகளில் உண்டு. ஜீவன், ஜீவியம், பவர், ஆனந்தம். ஒரு செயலை இந்த 4 நிலைகளிலும் சமர்ப்பணம் செய்தால் அது முழுச் சமர்ப்பணமாகும். ஜீவியம் இரண்டாகப் பிரியும். அறிவு, உறுதி என்பவை அவை. சமர்ப்பணத்தில் முதலில் எட்டுவது உறுதி. பவர் என்பது Force. அது ஜீவியத்திற்கு அடுத்த நிலை. *உறுதி ஜீவியத்தின் பகுதி*. சமர்ப்பணம் அதை எட்டினால் அது சக்தி வாய்ந்த வேகத்துடன் எழும். அதைத் தடுக்க முடியாது. சமர்ப்பணம் செய்வது அதிக சிரமம். அது தட்டுப்பட்டால், அது

நம்மை மீறிச் செல்லும். நாம் அதைக் கண்டு கொள்ளும்முன் காத தூரம் போய் விடும். *முதலிடமானாலும் அதைக் காண்பது பெரிய நேரம்*. அது கட்டுப்பட்டு சமர்ப்பணமானால், உலகமே அமைதியுற்றது போலும் மலையைக் கையால் தூக்க முடிவது போலும் தெரியும். இது நம்மையறியாமல் செயல்படும் நேரம் *அதிசயம், ஆச்சரியம், அற்புதம்* நிகழ்கிறது. நாமறிவது சிரமம். நாம் அதை அறிய முயன்று தோற்பது "யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது" என்பதற்கொப்பாகும். சிறுநீரகக் கல் வெள்ளிக்கிழமையிருந்தது திங்கட்கிழமை மறைந்தது இதனால். மனம் இதை நாடினால், தோல்வியும் பெரு வெற்றி. மனம் நெகிழ்ந்த நேரம், ஆழ்ந்து சொல்லிழந்த நேரம் இதைக் கருத உகந்த நேரம். பழைய விஷயம் மனதை உறுத்துவது இந்த நேரம் எழுந்தால் அது அப்படியே மறைவதைக் காணலாம். திருவுருமாறுவது அடுத்த கட்டம். "ஏன் அந்தப் புலி என்னைத் தின்னவில்லை?" எனக் கேட்டவர் உணரும் நிலை. அந்த நிலை எந்த அளவில் எழுந்தாலும் நெடுநாள் முன் நடந்தவை மேலெழுந்து நாம் ஆழத்தைத் தொட்டதைக் காட்டும். 20 வருஷம் முன் வந்த கனவு நினைவுக்கு வரும். *காலத்தாலும், இடத்தாலும், உணர்வாலும், நிகழ்ச்சியாலும் நாம் ஆழ்ந்ததை அறியலாம்*. அந்நேரம் உள்ளே எழும் அமைதி 1000 மைலுக்கு அப்பாலுள்ள நிகழ்ச்சியைக் காட்டும். 40 ஆண்டிற்கு முன் வாங்கிய கைமாற்று ரூபாய் 100/-ஐ இன்று 150/-ரூபாய் செலவு செய்து கொண்டு வந்து ஒருவர் கொடுத்தார். சீசனே இல்லாதபொழுது Grace மலர் தோட்டத்துச் செடியில் பூக்கும். இவை புறம். அகம் சூட்சுமம். ஜீவன் அமைதியானதால் மனமும் எண்ணமும் அசைவற்று, உடல் சமாதியிலிருந்ததைப் போல் உறைந்து விடும். அந்த நேரம் படிக்கவும் முடியாது. படித்தால் இதுவரை விளங்காதது விளங்கும். *சமர்ப்பணம், சரணாகதி,* Sincerity பெரும் யோக நிலைகள். ஓரளவு சொல்லால் விளக்கலாம். அனுபவம் தரும் அறிவு அளவு கடந்த பெரியது. **Experience cannot be explained.**

நல்லதை ஏற்று கெட்டதை மறுப்பது மனிதனின் கடமை. *இதைச் செய்யாமல் சௌகரியமானதை ஏற்பவன் மனிதனாக*



*மாட்டான்*. தெய்வீக வாழ்வை எட்ட அன்பரும், சாதகரும் மனித நிலையைக் கடக்க வேண்டும். அதாவது நல்லது, கெட்டது என்ற பாகுபாட்டைக் கடக்க வேண்டும். மேலும் சொன்னால் தவறு என்பதற்காக மறுக்கக் கூடாது, நல்லது என்பதால் மட்டும் ஏற்கக் கூடாது. ஆண்டவனுக்குச் சம்மதம் எனில் ஏற்க வேண்டும், சம்மதமில்லாவிட்டால் ஏற்கக் கூடாது. *ஏற்பது என்பதற்கு சமர்ப்பணமே அளவுகோல், நல்லதல்ல*. எதிரியைக் கொலை செய்யப்போய் படுகாயமுற்றவனை டாக்டர் குற்றவாளி என மறுக்கக் கூடாது. டாக்டருக்குத் தொழில், காயம்பட்டவருக்குக் கட்டுப்போட வேண்டும். சகாதேவன் துரியோதனனுக்குப் போர் வெல்ல நல்ல நாள் குறித்துத் தர வேண்டும். எதிரி வீடு எரிந்தாலும் அவிப்பது முறை. சூட்சுமமாக மனித நிலையைக் கடக்க ஒளி, இருள்; உயர்ந்தது, தாழ்ந்ததைப் போற்றக் கூடாது. *இது மனித நிலையைக் கடந்து உயர்ந்து வர மனநிலையைக் கடப்பது*. மனத்தைக் கடப்பது போல் உணர்வையும் கடந்தால் மனித நிலையை முழுவதும் கடக்கலாம். ரமணாஸ்ரமத்தில் திருடு போனதால் வெள்ளிச் சாமான்களை அலுமினிய சாமான்களாக மாற்றினர். திருட வந்தவர்கள் ஏமாந்தனர். ரமணரைக் கண்டு பிடித்து அடித்தனர். சிஷ்யர்கள் ஓடி வந்து தடுத்தனர். *"எனக்குப் பூசை நடக்கிறது. தடுக்க வேண்டாம்" என்றார் ரமணர்*. திருடு போவதைத் தடுக்க முயன்றது தவறு என ரமணர் உணர்ந்தார். திருட்டைத் தடுக்க தனக்கு உரிமையில்லையென நம்பினார். ரொட்டி சப்ளை செய்யும் பையன் 1911-இல் பகவான் வீட்டில் திருடினான். சாதகர்கள் அவனைப் பிடித்து அடித்தனர். சத்தம் கேட்டு பகவான் அடுத்த அறையினின்று வந்தார். விபரமறிந்தார். எவ்வளவு திருடினான் எனக் கேட்டார். 5 ரூபாய் என்றதும் அதை அவனிடமே கொடுக்கச் சொன்னார். அடிப்பதை நிறுத்தச் சொன்னார். இதன் அர்த்தம் என்ன? சாதகர்கள் திருடு போகாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமா? *சாதகர் மனத்தில் திருட்டு எண்ணம் இருப்பதால் திருடு போகிறது*. சாதகர்கள் மனம் சுத்தமாக இருக்க வேண்டும். திருடனை அடிக்கக் கூடாது. இது போல் குடும்பம் நடத்துவது வாழ்வனைத்தும் யோகம் என்றாகும். உதவி பெற்றவர் அதே

க்ஷணம் திட்டுகிறார் என்பதை எத்தனை முறை கண்டாலும் நம்புவது சிரமம். உதவுவது சமர்ப்பணமான செயலல்ல எனக் காட்டுகிறது. அகந்தையின் ஆர்ப்பாட்டமான செயல் என்பதால் திட்டு, பரிசாக வருகிறது. பெறுபவனுக்கு உதவி தேவை-யில்லை. எவராவது அகப்பட்டால் அவனை அழித்து மகிழ்வது மனித சுபாவம். அழிக்க முடியாவிட்டால் அவனைத் திட்டுகிறான். இது புரியாது. சமர்ப்பணம் தவறாது புரிய வைக்கும். அது சமர்ப்பண உயர்வு.

சமர்ப்பணமான செயலால் தவறு எழாது. *எச்செயல் தவறுகிறதோ அது சமர்ப்பணமாகாத செயல்*. அன்பன் செயலை இறைவனுக்குச் சமர்ப்பணம் செய்கிறான். ஊரில் வாழ்பவன் தன் செயலை ஊருக்குச் சமர்ப்பணம் செய்கிறான். அவனுக்கு ஊரால் தவறு வராது. சர்வதேச ரீதியாக AID உதவி கோடிக்கணக்கான கோடி பணம் 60, 70 ஆண்டுகளாக வழங்கப்பட்டது. *உதவி பெற்ற நாடுகளில் மக்கள் அனைவரும் உதவி கொடுத்த நாட்டை வெறுக்கின்றனர்*. இது அடிப்படையான மனித சட்டம். “ஒரு மனிதன் எவர் சொல்வதாலும் கேட்டுத் திருந்த மாட்டான்” என்கிறார் அன்னை. உதவியைப் பொருளாகப் பெற மனிதன் விரும்பினாலும், பெறும் நிலையில் தானிருப்பதை மனிதன் வெறுக்கிறான் என்பது மனித சுபாவத்தின் உண்மை. இந்த இடங்களிலும் சமர்ப்பணம் தவறாது. சமர்ப்பணமான உதவியால் கெட்ட பெயரோ, எதிர்ப்போ, வெறுப்போ எழாது என்பது உண்மை. சமர்ப்பணம் மனித சுபாவத்தைவிடப் பெரியது. தொடர்ந்த சமர்ப்பணம் சுபாவத்தை மாற்றும். *சுபாவம் குணம். குணம் வியாதி. குணத்தை மாற்றினால் வியாதி போகும்*. நெடுநாளாக ஒரு கை வீங்கியிருந்த பெண்ணுக்கு எந்த வைத்தியமும் குணம் தராத நேரம், “என் குணத்தை மாற்றிக் கொள்கிறேன்” என அவர் பிரார்த்தனை செய்த 7-ஆம் நாள் வீக்கம் வாடியது. நல்லது செய்ய நல்ல மனிதன் ஆசைப்படுவான். அவனே அன்பனானால் நல்லது அவனுக்கு நல்லது செய்யாது. சமர்ப்பணமான செயல் நல்லதானாலும் கெட்டதானாலும் உதவும்.

(தொடரும்)



## அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

வேலை போய்விட்டது. போன வேலை திரும்பக் கிடைக்க, பொதுவாக ஒரு வருஷமாகும். இதுவரை என் அனுபவம் அதுவே என்றவர்க்கு மேற்சொன்ன கருத்தைச் சொல்லி, அகவுணர்வைப் பூர்த்தி செய்தால் வேலை கிடைக்கும். அதற்கு ஒரு வருஷம் உங்கள் அனுபவம் ‘எந்த நிமிஷம் அகவுணர்வு பூர்த்தியாகிறதோ, அதே சமயத்தில் வேலை கிடைக்கும்’ என்று சொன்னால், அவர் ‘நான் வேலை வேண்டும் என்றுதானே நினைக்கின்றேன்; பூர்த்தி செய்ய என்ன இருக்கிறது’ என்று கேட்கிறார். வேலை வேண்டும் என்பது வேறு. வேலை செய்யப் பிரியப்படுகிறேன் என்பது வேறன்றோ? வேலை செய்யப் பிரியப்படாததால், வேலை போயிற்று. அந்த மனநிலைக்குரிய புற நிகழ்ச்சி வேலை போவது. அந்த மனநிலையை மாற்றி, உண்மையாகவே மாற்றி, இப்பொழுது வேலை செய்ய வேண்டும் என்ற பிரியத்தை மனதில் ஏற்படுத்தினால், அகவுணர்வு பூர்த்தியாகிறது. அப்படி மனத்தை மாற்றி, உள்ளுணர்வைப் பூர்த்தி செய்தபின், வெளிநாட்டி-லிருந்து செல்வாக்குள்ள உறவினர் வீட்டுக்கு வந்து உள்ளூரில் பெரிய கம்பெனியில் பெரிய வேலைக்கு ஏற்பாடு செய்து 15-ஆம் நாள் வேலையில் சேர்ந்தார் ஒருவர்.

நமக்குப் புற நிகழ்ச்சியாகத் தெரிவது அகவுணர்ச்சியின் பிரதிபலிப்பே. புற நிகழ்ச்சி நம் கையில் இல்லை; அகவுணர்ச்சி நம் கட்டுப்பாட்டுக்குட்பட்டது. அதை மாற்றும் திறன் நமக்குண்டு. அதைச் செய்ய முன்வருவோர்க்கு வெளி-நிகழ்ச்சிகள் அதே சமயத்தில் கட்டுப்படும். பிரார்த்தனை பலிக்க உதவி செய்யும் முறைகளில் இதுவும் ஒன்று.

ஓர் அமெரிக்கருக்குச் சிறு வயதிலிருந்து ஒரு கதை எழுதி வெளியிட வேண்டும் என்ற அவா அதிகமாகவுண்டு. 6 வயதில்

ஒரு கதை எழுதினார். M.A. முடித்தபின் பிரபலமான தினசரி பேப்பரில் நிருபராக வேலை செய்தார். வெளிவரும் ஒவ்வொரு கதையையும் படிப்பார். தாம் எழுத இருக்கும் 'கதை'யுடன் ஒப்பிடுவார். எப்படியாவது ஒரு புத்தகம் தம் பெயரில் வெளிவர வேண்டுமென்ற ஆவல் மிகுந்திருந்தது. தென் அமெரிக்காவில் ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராகச் சென்றார். இங்கிலாந்தில் ஒரு சர்வதேச மாத இதழுக்கு 15 ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார். அபிலாஷை பூர்த்தியாகவில்லை. ஆசிரியராகப் பிறர் எழுதுவதை வெளியிடும் பாக்கியமே கிடைத்தது. மேலும் உயர்ந்த பதவிகளை எட்டினார். வயது 50-ஐத் தாண்டியது. அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டார். ஆசிரமம் வந்தார். ஓர் உயர்ந்த புஸ்தகம் எழுத நிறைந்த கருத்துகளை வைத்துக்கொண்டு, அதை வெளியிடும் தகுதியில்லாமல் தகுதியுடைய ஒருவரைத் தேடிக்கொண்டிருக்கும் இளைஞரைச் சந்தித்தார். இவருடைய தகுதி மிக உயர்ந்தது. நிருபர், ஆசிரியர் பதவிகளை வகித்து, அதைவிட உயர்ந்தவர். கதை எழுத முடியவில்லை. தம் துறையில் இளைஞர் புதுக்கருத்துகள் சொல்வதைக் கேட்டார். இளைஞருடைய கருத்தும், இவருடைய தகுதியும் சேர்ந்து புத்தகம் வெளிவந்தது. 5 மொழிகளில் பிரசுரம் ஆயிற்று. இவருக்கிருந்த ஆர்வம் பெரியது. அது அபிலாஷையாகவே இருந்தது. அதற்குரிய திறமையில்லை. தம் துறையிலும் எழுதக்கூடிய தகுதியில்லை; வெளியிடக்கூடிய அந்தஸ்து இருந்தது. அன்னையிடம் வந்தவுடன் இவருடைய ஆர்வத்தைப் பூர்த்திசெய்ய, இவரிடம் எந்தக் குறையிருந்ததோ அதை இன்னொருவர் நிறைவு மூலம் பூர்த்தி செய்தார் அன்னை. வாழ்க்கை பூர்த்தி செய்யாத விஷயங்களை, பூர்த்தி செய்யத் திறமையில்லாத விஷயங்களை அன்னை பூர்த்தி செய்கிறார். அன்னையின் குறிக்கோள் சிருஷ்டி. அதாவது புதியன படைத்தல். ஒருவருக்கு எழுத்துத் திறமையிருக்கிறது; வெளியிடும் அந்தஸ்து இல்லை. மற்றொருவருக்குப் புத்தகத்தை வெளியிடும் அந்தஸ்து (social status) இருக்கிறது; எழுதும் திறமையில்லை. இவையிரண்டும் சேர்ந்தால் புத்தகம் என்பது சிருஷ்டிக்கப்படும். அதுபோன்ற சிருஷ்டியை அன்னை



அனுதினமும் செய்துகொண்டிருப்பதால் நமக்குள்ள திறமையெல்லாம் செலவு செய்து முயற்சியை முடித்தபின் அன்னைக்குப் பிரார்த்தனை செய்தால், நமக்கில்லாத விஷயத்தைக் கொண்டுவந்து சேர்த்து, பிரார்த்தனையைப் பூர்த்தி செய்வார்.

திறமையில்லாத பணக்கார முதலாளிக்குத் திறமையும், நேர்மையும் உள்ள மானேஜர் அமைந்தால், அதை அதிர்ஷ்டம் என்கிறோம். நேர்மையே இல்லாத வல்லுநரை எவரும் நம்பி வேலை கொடுக்கமாட்டார்கள். வல்லுநராக (expert) இருந்தால் மட்டும் போதாது, நேர்மையும் வேண்டும். நேர்மையான பார்ட்னர் கிடைப்பதை அதிர்ஷ்டம் என்கிறோம். பொறுப்பில்லாத கணவனுக்குப் பொறுப்புள்ள மனைவி அமைவதை அதிர்ஷ்டம் என்பது வழக்கம். நமக்கு எது இருக்கிறது, எது இல்லை என்ற பிரச்சனையில்லை. இருப்பதை முழுவதுமாகப் பயன்படுத்தியபின் அன்னைக்குப் பிரார்த்தனை செய்தால், இல்லாத அனைத்தையும் மற்றவர்கள் மூலமாகவும், புது சந்தர்ப்பங்கள் மூலமாகவும் அன்னை பூர்த்தி செய்வது வழக்கம். அதுவே அன்னைக்கு உரிய சிறப்பு. சிறப்பால் தவறாது அன்னை நம் வாழ்வில் செயல்பட நாம் செய்ய வேண்டியது பிரார்த்தனை. பிரார்த்தனையை அதற்குரிய ஆன்மிக இலட்சணத்துடன் பூர்த்தி செய்ய வேண்டும். பிரார்த்தனையை ஆரம்பிக்கும்முன் அதற்குரிய நிபந்தனைகளைச் சரிவரப் பூர்த்தி செய்ய வேண்டும். நம் கடமைகளையும், திறமைகளையும் முழுவதுமாகப் பயன்படுத்த வேண்டும் (exhaust) என்பது ஒரு நிபந்தனை. இதுபோன்ற பிரார்த்தனை தவறியதை நான் 31 வருஷ காலத்தில் ஒரு முறையும் பார்த்ததில்லை. எவரும் கண்டதாக நான் கேட்டதும் இல்லை.

பிரார்த்தனையை எளிதாகவும் கருதலாம். எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய பெரிய விஷயமாகவும் கருதலாம். அப்படிக் கருதினால், பிரார்த்தனைக்குரிய ஒவ்வொரு அம்சத்தையும் ஓர் உதாரணத்தின் மூலம் விளக்கி எழுத முயன்றால், அது கட்டுரையாக ஆரம்பித்து புத்தகமாக வளர்ந்துவிடும். இக்கட்டுரையில் முக்கியமான எல்லா அம்சங்களையும்

குறிப்பிட்டுச் சில சிறப்பான உதாரணங்களையும், குறிப்பான நிகழ்ச்சிகளையும் மட்டும் சொல்கிறேன்.

பிரார்த்தனையின் ஜீவனோடு தொடர்புகொண்டு அதை ஆரம்பிக்க நேரம், இடம் குறிப்பிட்டு, அதற்குமுன் நம் கடமைகளை எல்லாம் பூர்த்தி செய்தபின், நாம் எடுத்துக்கொண்ட பிரச்சனையை அன்னைமுன் வைத்தபின், என்ன வேண்டும் என்று பிரார்த்திப்பது ஒரு கேள்வி. அதற்குரிய பதில்கள் பல.

கடன் கொடுத்தோம். இனி வாராது என்ற நிலையில், 'இந்தக் கடன் திரும்பி வர வேண்டும்' என்றாவது, 'வட்டியுடன் வர வேண்டும்' என்றாவது, 'ஒரே மாதத்தில் கிடைக்க வேண்டும்' என்றாவது குறிப்பாகப் பிரார்த்தனை செய்யலாம். பெரும்பாலும் பிரார்த்தனை செய்தபடியே பூர்த்தியாகும். அப்படியில்லை என்றால், அதைவிட ஒரு பெரிய நல்லதைக் கொடுப்பதற்கு மட்டுமே அன்னை எதிர்பார்க்கும் பலனை மாற்றுவார்.

*தவறிய பிரார்த்தனை:*

வியாபாரி ஒருவர் ஜில்லா ஏஜென்சி எடுக்க முழுக்க அபிப்பிராயப்பட்டு, அதற்குரிய முறையில் பிரார்த்தனையைப் பொறுத்தவரை எதுவும் தவறில்லாமல் செய்துவிட்டு, ஒரு மாத காலம் அலைந்துகொண்டிருக்கும்பொழுது, சமாதிக்குப் பல முறை வந்தவர் முழுவதுமாக ஏமாந்துவிட்டார். ஏஜென்சி கிடைக்கவில்லை என்ற ஏமாற்றம் பெரியது. தாங்கிக்கொள்ள முடியவில்லை என்றாலும் அன்னைமீது நம்பிக்கைக் குறையவில்லை. மீண்டும் ஒருமுறை ஆசிரமம் வர முடிவு செய்தபொழுது வழியில் ஒரு கார் ரிப்பேராகி இருப்பதைப் பார்த்து அவர்களுக்கு உதவப்போய், உதவி நட்பாக மாறி, நட்பு வியாபாரக்கூட்டாக மாறி, கூட்டு ஏழாம் நாள் ஷேர் வாங்கியதில் முடிந்து, மனம் நிறைந்த நிலையில் அவர் கண்ட புதுமை என்னவென்றால், எந்தப் பொருளுக்கு ஜில்லா ஏஜென்சி கிடைக்கவில்லையோ, அந்தப் பொருள் உற்பத்தி செய்யும் கம்பெனியில் இவர் வாங்கிய ஷேர் சர்ட்டிபிகேட் இவரை அக்கம்பெனியின் டைரக்டராக நியமித்தது.



அன்னையிடம் செய்த பிரார்த்தனை தவறுவதில்லை. தவறினால் அதன் மூலம் நாம் எதிர்பார்ப்பதைவிடப் பெரிய நல்லதே நடக்கும். இது அன்னையின் அவதாரச் சிறப்பு. பெரும்பாலும் குறிப்பிட்ட பிரார்த்தனைக்குப் பலன் கேட்டது போலிருக்கும். பிரார்த்தனை அதற்குரிய இலட்சணத்துடனிருந்தால், கேட்டது கேட்டபடியே கிடைக்கும். இதுவே பிரார்த்தனைகளில் சிறியது.

நமக்குத் தெரிந்த பலன் இருக்கிறது. அதைக் கேட்கிறோம். கேட்டபடி கிடைக்கிறது. இதைவிட வேறென்ன வேண்டும் என்று நினைக்கலாம். போர்ட் டிரஸ்டில் குமாஸ்தாவாகப் போன மேதை சீனுவாச ராமானுஜத்திற்கு, கேம்பிரிட்ஜ் போகும் வாய்ப்பு அந்த உத்தியோகத்தின் பின்னணியில் புதைந்திருந்தது அவருக்கோ, மற்றவர்க்கோ தெரியவில்லை. அதேபோல், ஒவ்வொரு நிகழ்ச்சிக்குப் பின்னும், ஒரு பெரிய உலகம் மறைந்திருக்கிறது. அதை நாம் அறிவதே இல்லை. நமக்குப் புரிந்த பலனைக் கேட்டால் அன்னை அதைக் கொடுக்கிறார். அதற்குப் பதிலாகப் பிரச்சனையை அன்னைமுன் வைத்து, அன்னையின் திருவுள்ளப்படி இது தீர வேண்டும் என்று பிரார்த்தனை செய்வது சிறப்பு. இப்படிச் செய்வதால் பிரார்த்தனை சமர்ப்பணமாகி அந்த நிகழ்ச்சி மூலம் அன்னை நம் வாழ்வில் எவ்வளவு சிறப்பாகச் செயல்பட முடியுமோ அவ்வளவு சிறப்பாகச் செயல்படுவார். நடைமுறையில் நமக்குத் தெரிந்த பலன் என்று ஒன்று இருந்தால் மனம் அதை மட்டுமே விழையும்; வேறெதையும் காதில் போட்டுக் கொள்ளாது. இதுபோல் பிரார்த்தனை செய்வது அரிது; செய்தால் சிறப்புண்டு.

ஒரு வியாதி வருகிறது என்றால் பிரார்த்தனை செய்தால் அது குணம் அடையும். பிரார்த்தனை அதற்குரிய இலட்சணத்துடன் இருந்தால் அந்த வியாதி பின்னர் வாராது. வியாதி வந்தவுடன் ஒரு முறை பிரார்த்தனை செய்தால் சில சமயங்களில் உடனே அது விலகும். விலகியபின் வியாதி நமக்கு நினைவு வருவதில்லை. மீண்டும் வியாதி வந்தால்தான் நினைவு வரும். அதுபோன்ற சமயங்களில், பிரார்த்தனையை முறையாக,

அர்த்தபுஷ்டியாக, சிறப்பாகச் செய்யா விட்டாலும், இது மீண்டும் வரக்கூடாது என ஒரு பிரார்த்தனையையும் சேர்த்துக்-கொண்டால், அந்தப் பிரார்த்தனையும் பூர்த்தியாகும்.

ஒரு தொந்தரவு வந்தால் அது விலகவேண்டும் என்றுதான் நமக்குப் பிரார்த்தனை செய்யத் தோன்றும். மாறாக, இந்தத் தொந்தரவு நல்லதாக மாறி, நல்ல பலனைக் கொடுக்க வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்யலாம்; அதுவும் பலிக்கும்.

கஷ்டம் வந்து கண்ணீரால் நனைந்திருக்கும் சமயம், இது எப்பொழுது விலகும் என்று மட்டுமே மனம் காத்திருக்கும். அன்னையின் பல்வேறு அம்சங்கள் தெரிந்தவர்கள் அந்தச் சமயத்தில் இந்தக் கஷ்டம் வந்து விலகுவதால் நான் அன்னையிடம் நெருங்கி வர வேண்டும் என்று பிரார்த்தித்தால், கஷ்டம் விலகும். நமக்கு நம்பிக்கையும், பக்தியும் பெருகி ஆன்மிகச் சிறப்புறுவோம். கோபம் போன்ற குணக்கேட்டால், அவசரப் புத்தியால் ஒரு சிக்கலை நாம் ஏற்படுத்திவிட்டால், பிரச்சனையைத் தீர்க்க பிரார்த்தனை செய்கிறோம். (அத்துடன் பிரச்சனைக்கு வித்தான அவசரமும் நம்மை விட்டுப் போக வேண்டும், மீண்டும் இதேபோல் அவசர புத்தியால் சிரமம் ஏற்படக்கூடாது என்ற பிரார்த்தனையையும் சேர்த்துக் கொண்டால், அது பிரச்சனைக்குரிய அஸ்திவாரத்தையே மாற்றுவது ஆகும்). குடும்பத்தில் ஏற்பட்ட கோளாறுகள் பல. அந்தத் தலைமுறை போய்விட்டது. அவர்கள் செய்த கர்மத்தால் இப்பொழுது நான் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது என்றால், பிரச்சனையை விலகச் செய்யும் பிரார்த்தனையுடன் அதன் பூர்வோத்திரமான கர்மமும் கரைய மற்றொரு பிரார்த்தனையும் சேர்த்துக்கொள்ளலாம். ஒரு பெரிய சொத்தை விலைக்கு வாங்கும்பொழுது, விலை படிந்து பத்திரம் சிக்கல் இல்லாமலும், குளறுபடிகள் இல்லாமலும் சொத்து கைக்கு வர வேண்டும் என்பது இயல்பான பிரார்த்தனை. இது போன்ற நேரங்களில், பெருந்தொகை ஈடுபட்டிருப்பதால், விஷயம் பெரியது என்பதால், மனிதர்களுடைய குணவிசேஷங்களைச் சிறப்பாக அறிய முடியும். தொகை அதிகமானால் நிதானமானவன்



அவசரப்படுவான். பரம்பரையான நாணயஸ்தன் நாணயத்தை இரண்டாம்பட்சமாக்கி தொகைக்குரிய அளவில் பேச்சை மாற்றிப் பேசுவான். எல்லோரிடமும் மறைந்துள்ள குண-விசேஷங்கள் செயல்படும் நேரம் அது. நமக்கு அதை எல்லாம் கவனிக்க நேரமிருக்காது. காரியம் கூடிவர வேண்டும் என்பதே முக்கியம். அன்னைக்கு இதுபோன்ற சந்தர்ப்பங்களில் செய்யும் பிரார்த்தனையுடன் மனிதனுடைய குண நுணுக்கங்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று வேறொரு பிரார்த்தனையை-யும் சேர்த்துக்கொண்டால், சிறிய மனிதனுக்குள்ள பெருந்-தன்மை, பெரிய மனிதனிடம் இதுவரை வெளிப்படாத மிகப்பெரிய குணம், நல்லவனுக்கு உள்ள கெட்ட குணம், நண்பனுடைய துரோக மனப்பான்மை, லஞ்சத்திற்குப் பேர்போன புரோக்கருடைய சாமர்த்தியம், நாணயம் போன்றவை வெளிவந்து 25 வருஷ அனுபவத்தை 25 நாட்களில் நமக்களிக்கும்.

இன்று ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சனையை அன்னை தீர்க்க வேண்டும், அத்துடன் எதிர்காலத்தில் இதுவோ, மற்ற எதுவோ பிரச்சனையாக நம் வாழ்வில் எதிர்படக்கூடாது என்றும் பிரார்த்திக்கலாம். கடன்பட்டுக் கலங்கியவர்கள் கடன் தீரும்பொழுது அப்படி நினைப்பதுண்டு. அன்பர்கள் அப்படிப் பிரார்த்தனை செய்தால் அது பலிக்கும். 1916-இல் அன்னை ஜப்பானில் உள்ள சமயம் ஒரு கொடிய ஜுரம் எங்கும் பரவி அன்னையையும் பாதித்தது. அன்னை தம்மைக் குணப்படுத்திக்-கொண்டபின் நாடெங்கும் ஜுரம் விலகியது. அதன்பின் அந்த ஜுரம் ஜப்பானை விட்டே நிரந்தரமாகப் போய்விட்டது.

ஒரு பிரச்சனை ஏற்பட்டு, அது பிரார்த்தனையால் தீரும் பொழுது இனி எந்தப் பிரச்சனையையும் தீர்க்கும் திறன் எனக்கு வேண்டும் என்றும் பிரார்த்திக்கலாம். குடும்பத்தில் சண்டையும், பூசலுமாக இருந்தால், பூசல் ஒழியப் பிரார்த்திப்ப-துடன், இந்தப் பூசல் ஒழிவதன் விளைவாக இனி இக்குடும்பம் அன்புக்கும், ஒற்றுமைக்கும் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்றும் பிரார்த்திப்பது நல்லது.

(தொடரும்)

## அன்பர் அனுபவம்

ஸ்ரீ அன்னையின் தியான மையத்தில் பொறுப்பில் இருக்கும் பெண்மணி தன் சேவைக்கான நேரம் நெருங்கவே தியான மையம் செல்ல ஆயத்தமானார். அப்பொழுது வெளியூர் சென்றிருந்த அவரது கணவனிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. தான் இரயிலில் வந்து கொண்டிருப்பதாகவும் அவருடைய வண்டியில் இரயில் நிலையம் வந்து தன்னை அழைத்துப் போகும்படியும்கேட்டார். அவரும் வீட்டில் தாயாரிடம் சொல்லி-விட்டு தனது இரண்டு சக்கர வாகனத்தில் இரயில் நிலையம் சென்றார்.

அந்தப் பொழுது சாய்ந்த வேளையில், ரயில் நிலையத்தில் வண்டிகள் நிறுத்தும் இடத்தில் ஒரு தாயும் மகளும் அங்கு செல்பவர்களிடம் ஏதோ விசாரித்தபடி நின்று கொண்டிருந்தனர். தன் வண்டியை அங்கு நிறுத்திய அன்பரிடம், தாம் செல்ல வேண்டிய ஊர் பெயர் சொல்லி அடுத்த ரயில் எப்பொழுது என நின்றுகொண்டிருந்த தாய் விசாரித்தார். அன்பர், இரயில் நிலையம் உள்ளே சென்று விசாரித்து அதிகாலையில் அடுத்த இரயில் என அவருக்குப் பதில் கூறினார்.

கூறிக்கொண்டிருக்கும்போதே, ரயிலிலிருந்து இறங்கிய அவர் கணவர் அங்கு வந்து சேர்ந்தார். அன்பர் கணவரிடம் இவர்களைப் பற்றிய விவரம் சொல்லியபோது, “அவர்கள் எல்லோரிடமும்தான் கேட்கிறார்கள். வந்த வேலையைப் பார். நீ வீட்டுக்கே திரும்பிப் போ. எனக்குப் பேருந்து நிலையம் அருகில் வேலையிருக்கிறது. வேலை முடித்துவிட்டு நானே வந்துவிடுகிறேன்” என்றார்.

கணவர் சென்றவுடன், அன்பர் வண்டி நிறுத்திய இடத்தில், தயங்கியபடியே அந்தத் தாயும் மகளும் நின்றிருந்தனர். சிறிது பேச்சுக் கொடுத்ததில், அவர்கள் நவக்கிரக ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு ஊர் திரும்புவதாக அறிந்தார். மேலும் இரயில் நிலையம் புனரமைப்பிற்காக பழைய கட்டடம் இடிக்கப்பட்டு வேலைகள் நடந்துகொண்டிருக்கிறபடியால் பயணிகள் தங்கு-மிடமும் ஏற்றதாக இல்லை என்றும் அதிகாலை வரை எங்குத் தங்குவது என அச்சமாக உள்ளது என்றும் கையிலும் இரயில்



பயணக் கட்டணம் தவிர ஏதும் பணம் இல்லை, தங்குவதற்கு ஏதேனும் வழி சொல்ல முடியமா என்றும் இவரைக்கேட்டனர்.

தனியாக நிற்கும் அவர்களை விட்டுச்செல்ல அன்பருக்கு மனம் வரவில்லை. அன்னைக்குச் சமர்ப்பணம் செய்துவிட்டு, தான் அன்னை படங்களை வைத்து வழிபட தன் வீட்டை ஒட்டிய-படி ஏற்படுத்தியுள்ள **outhouse** போன்ற இடத்தில் இவர்களை ஓரிரவு தங்க வைக்க எண்ணினார். அவர்களிடம் சற்றுப் பொறுங்கள் எனக் கூறி அருகிலிருந்த ஆட்டோ டிரைவரிடம் சென்றார். “இவர்கள் இருவரையும் என் வீடு வரை அழைத்துச் செல்ல வேண்டும். என்னிடம் பணமில்லை. இறக்கிவிடும் பொழுது பணம் தருகிறேன். வர முடியுமா?” எனக் கேட்டார். ஆட்டோ டிரைவரும் ஒத்துக்கொண்டு, “நீங்கள் முன்னே செல்லுங்கள். உங்களைத் தொடர்ந்து வருகிறேன்” என்றார்.

அன்னை அன்பர் வீடு வந்ததும், **outhouse** கதவைத் திறந்துவிட்டு, நீங்கள் உள்ளே இருங்கள். நான் உங்களுக்குச் சாப்பிட ஏதேனும் கொண்டு வருகிறேன் என்று வீட்டினுள் சென்றார்.

அன்பர் திரும்ப வந்து பார்த்தபொழுது, உள்ளே ஸ்ரீ அன்னையின் திருவுருவப்படத்தின் முன் மகள் நின்று கண்ணீர் மல்க அழுது கொண்டிருந்தாள். தன் நிலைமையை எண்ணி அழுகிறாள் என்று எண்ணிய அன்பருக்கு அவர் கூறியது பெரும் வியப்பைத் தந்தது.

“எனக்குக் கல்யாணமாகி ஒரு குழந்தை இருக்கிறது. குழந்தைக்கு ஜாதகம் கணிக்கச் சென்ற இடத்தில் சோதிடர் கணவனையும் குழந்தையையும் நான் பிரிந்திருக்க வேண்டும், நவக்கிரக ஸ்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்ய வேண்டும் எனச் சொன்னார். அந்தப் பரிகாரம் நிமித்தமே நாங்கள் இங்கு வந்தோம். இவ்விவரத்தை என் கணவரிடம் சொல்லியபோது, அவர் தன் பையிலிருந்த அன்னையின் படத்தைக் காண்பித்து, “நான் இந்தம்மாவைத்தான் நம்பியிருக்கிறேன். எதுவாக இருந்தாலும் இந்தம்மாவிடம் சொல்லிவிட்டு என்னுடனே இரு. ஒன்றும் ஆகாது” என்று மிகுந்த நம்பிக்கையுடன் கூறினார். நான்தான் அவர் சொல்லைக் கேட்காது, என் அம்மாவுடன் பரிகாரத்திற்காகப் புறப்பட்டு வந்தேன். தெரியாத ஊரில் தனியாக மாட்டிக் கொண்டு

தங்க இடமில்லாமல் நாங்கள் தவித்த போது புகலிடம் தந்தது இந்தம்மாதான். நான் என் கணவர் கூறியதையும் அன்னையையும் நம்பாமல் பரிகாரம் செய்ய வந்த போதும், நாங்கள் அழைக்காமலே எங்களைக் காப்பாற்றியது இந்த அன்னையே. இவர் எங்களுடன் இருக்கிறார். இனி எங்களுக்கு எவ்விதப் பிரச்சனையும் இல்லை என்று மனம் நிம்மதியடைந்தது" என்றார்.

கணவரின் அன்னை பக்தி மற்றும் நம்பிக்கை, திக்கற்றுத் தவித்த மனைவியை நாடிவந்து ஸ்ரீ அன்னை அரவணைத்த விதத்தினை கண்ட அன்பரும் மனம் நெகிழ்ந்தார். இப்புதிய அனுபவத்தை எண்ணி, சொல்ல வார்த்தைகள் வராமல் பரவசத்தில் மூழ்கினார். யாரும் உதவிக்கு இல்லாமல் குழப்பத்தில் நிற்கும் இவர்களைக் காப்பாற்ற அன்னை தன்னை ரயில் நிலையத்திற்கு வரவழைத்த விதத்தை எண்ணி ஆச்சரியப்பட்டார்.

முகம் தெரியாத அன்னை அன்பர்களை ஒருவரோடொருவர் சேர்த்து இணைக்கும் அன்னை சக்தியை என்னென்று கூறுவது என்று வியந்து மகிழ்ந்தார்.

## ஜீவிய மணி

*உடலுக்கு நோய் இல்லை. வந்தால் தானே குணப்படுத்திக் கொள்ளவல்லது. ஒரு ஸ்பிரிங்கை அழுத்தினால் சுருங்கும். நாம் அதை நீட்ட முயல வேண்டியதில்லை. அழுத்தாமல் இருந்தால் தானே நீண்டுவிடும். உடல் அதைப்போன்றது.*

*டாக்டர்கள் உடலில் வியாதியை உற்பத்தி செய்து பிறகு குணப்படுத்துகிறார்கள் என்பது பகவான் வாக்கு.*

*நாம் உடலை அதிகமாகக் கவனித்தால் அது நோயுறும். சந்தோஷமாக இருக்கத் தீவிர முயற்சி எடுத்து உணர்வை அளவுக்கு மீறிப் பாராட்டினால் சோகம் எழுந்து நிலைக்கும். அதேபோல் மனத்தை அதிகமாகக் கவனித்தால் பைத்தியம் பிடிக்கும் என்கிறார் அன்னை. இவை அனைத்தும் பகுதிகள். நாம் என்பதும் பகுதியான அகந்தை. பகுதிகளை அவர்கள் போக்குக்கு விட்டுவிட்டால் இயல்பாக இயற்கையாக நல்ல ஆரோக்கியத்துடன் அவை இருக்கும். ஒரு பகுதியை அடுத்த பகுதி அதிகமாகக் கவனித்தால் அப்பகுதியின் குறை எழுந்து வளரும் என்பது தத்துவம்.*



**அன்னை இலக்கியம்**

# எந்த நேரமும் அன்னை வருவார்

இல. சுந்தரி

*எந்தச் சிறிய விஷயமாவது, நேரடியாகவோ மறைமுகமாகவோ இறைவனாகிய இந்த அற்புதப் பேருண்மையுடன் உன்னைத் தொடர்புறுத்தும் ஒவ்வொரு சமயமும், இதயம் ஒரு தீவிரமான, அற்புதமான மகிழ்ச்சியால், வேறெதனாலும் கிட்டாத ஓர் ஆனந்தச் சுவை தரும் நன்றியுணர்வால் நிரம்புகிறது.*

**ஸ்ரீ அன்னை**

எந்த நேரமும் அன்னை வருவார். எந்த வடிவிலும் அன்னை வருவார்.

அவர் ஒரு பக்தர். பக்தி செய்வதையே தம் வாழ்வாகக் கொண்டவர் என்றும் கூறலாம். தெய்வீகத்தை எங்குக் கண்டாலும், பணியவும், தொண்டு செய்யவும் விரும்பும் பாங்குள்ளவர். பணி புரியும் இடத்திலும் உழைப்பு, நேர்மை இவற்றைக் கடைப்பிடிப்பவர். எப்பொழுதும் இவரைச் சுற்றி ஒரு நல்ல சூழல் இருப்பதுண்டு.

விதிவசத்தால் நேரும் துன்பங்களையும் சுயபச்சாதாபம் ஏதுமின்றி புன்னகையுடன் ஏற்கும் பக்குவம் பெற்றிருந்ததால் அவை அவரிடம் தலை வணங்கிச் சென்றுவிடும். அவருடைய பக்தியுணர்வைக் கண்டு பரவசப்பட்ட பரம்பொருள் அவருக்குக் காட்சிதர மனமுவந்தது. மன்னிக்க வேண்டும். பரம்பொருளுக்கு ஏது மனம்? எழுதும் என் சிற்றறிவிற்குத் தெரிந்த கருவி மனம் என்பதால் அதைப் பயன்படுத்திவிட்டேன்.

மேற்கூறிய பக்தர் தாம் பணிபுரிந்த நிறுவனத்திற்காக ஒரு இன்றியமையாத வேலையாய்த் தம் முதலாளியின் நம்பிக்கைக்குரியவராய்ப் புதுவை வந்தார்.

அன்றைய தினம் அவர் வாழ்வின் பிறவிப்பயன் அவருக்குக் கிடைக்கும் தினமாக அமைந்தது. அன்று பாண்டிச்சேரியில் தரிசன நாள். ஸ்ரீ அன்னையின் ஜென்மதினம்.

பக்தர் தம் நிறுவனத்தின் பொருட்டுத் தாம் வந்த பணிகளை முடித்துவிட்டு, சிறிது கடற்காற்றை அனுபவிக்க எண்ணி வந்தவர், மக்கள் திரள்திரளாகச் செல்வதைக் கண்டார். என்னவாக இருக்கும் என்று சிந்தித்த வண்ணம் வந்தவரின் செவியில் "ஆனந்தம்" "பரவசம்" போன்ற உயர் சொற்கள் கேட்ட வண்ணம் இருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவர், "எத்தனை நாட்கள் தவம் இன்று பலித்தது. பிறந்த பயனை அடைந்து விட்டேன்" என்றார்.

இவருக்கு ஆர்வம் மிகுந்தது. ஒருவரை நெருங்கி "இன்று என்ன விசேடம்?" என்று விசாரித்தார்.

"நீங்கள் புதுவைக்குப் புதியவரா?" என்றார் அவர். "ஆமாம் ஒரு வேலையாக இன்று இவ்வூர் வந்தேன்" என்றார்.

"இன்றைக்கு இவ்வூருக்கு வருகின்றவர்கள் அன்னையின் ஜென்மதின தரிசன நாளை முன்னிட்டுத்தான் வருவார்கள். உங்களுக்கு அதுபற்றி ஏதும் தெரிந்திருக்கவில்லை என்று நினைக்கிறேன்" என்றார்.

"ஆமாம் இதுவரை தெரியாது. இன்று நான் வந்ததும் இறையருள்தான் போலும். தரிசன நாள் பற்றிச் சிறிது விவரம் கூறினால் நானும் அதைப் பெறுவேன்" என்றார்.

"இன்று ஸ்ரீ அன்னையின் ஜென்ம தினத்தை முன்னிட்டு தரிசன நாள். இன்று ஸ்ரீ அன்னையின் அறையைத் தரிசனம் செய்து அவர் ஆசிகளைப் பெற முடியும். நேர்மையான பிரார்த்தனைகள் மிக எளிதாக நிறைவேறிடும்" என்றார்.

"அப்படியா? அன்னை என்பவர் அங்கிருக்கிறாரா? அவரைக் காண ஏதேனும் விதிமுறைகள் உண்டா?" என்றார்.

"அன்னை மானுடவடிவில் வந்த தம் அவதாரத்தைக் கலைத்துவிட்டார். ஆனால் சூட்சுமத்தில் ஆசி வழங்குகிறார். இப்போதே நேரமாகிவிட்டது. நீங்கள் விரைவில் சென்றால்தான் தரிசனம் பெற முடியும். முதலில் அதைச் செய்யுங்கள். உங்கள் ஆர்வத்திற்கேற்றவாறு அன்னை தன்னை உங்களுக்குப் புரியவைப்பார்" என்று கூறிச் சென்று விட்டார்.



அருகில் சென்று விசாரித்ததும் டோக்கன்கள் முன்பே கொடுத்து முடிந்ததும், அதற்குரிய தரிசன வரிசையும் முடிந்து விட்டதையும் அறிந்தார். இனி என்ன செய்ய?

வாய்விட்டு யாரையும் எதுவும் கேளாமல் "உங்கள் ஆர்வத்திற்கு ஏற்றவாறு அன்னை தன்னைப் புரிந்துகொள்ள வைப்பார்" என சற்றுமுன் ஓரன்பர் கூறிய சொற்கள் நினைவில் எழ அன்னையே! நீர் யார்? உங்களை நான் எப்படித் தரிசிப்பது. இவ்வளவு நல்ல செய்திகள் அறிந்தபின் தரிசனம் இழக்க மனம் இசையவில்லையே. நான் என்ன செய்ய வேண்டும்? என்று தமக்குள் பேசிய வண்ணம் நின்றிருந்தார்.

அழகிய உயர்ரக காரிலிருந்து இறங்கி ஒரு மேல்நாட்டுப் பெண்மணி இவரை நோக்கிப் புன்னகையுடன் வந்தார்.

இவரும் தம்மைப் போல தாமதமாக வந்து தரிசனம் பெறாமல் போகப் போகிறார் போலும் என்று எண்ணிய வண்ணம் அவர் தம்மிடம் வந்து என்ன கேட்பார்? என்று நின்றவரைப் பார்த்து, நீண்ட நாள் அறிமுகமான நண்பரைப் போல "தரிசனம் கிடைத்ததா?" என்றார்.

"இல்லை இதுபற்றி முன்பே ஒன்றும் அறிந்திராததால் முன்னதாக வந்து அனுமதிச் சீட்டுப் பெற்றிலேன். தரிசனம் முடிந்து விட்டதாம். நான் அதற்குப் பேறு பெறவில்லை போலும்" என்று ஏக்கத்துடன் கூறினார்.

"இறை தரிசனத்திற்கு முடிவேது? ஆனால் நமக்குத்தான் கண்ணெதிரே கடவுள் வந்தாலும் தெரிவதில்லை" என்றார் அந்தப் பெண்மணி.

"நீங்களும் தரிசனம் பெறவில்லையா?" என்றார். "ஏன் பெறவில்லை. நீங்கள் கடவுளைத் தேடுகிறீர்கள் நான் பக்தர்களைத் தேடுகிறேன்" என்றார் அந்தப் பெண்மணி.

"பக்தர்களையா? எதற்கு?" என்று வியப்புடன் கேட்டார் இவர்.

"ஓ! அதுவா? இறைவனைத் தம் இதயத்தில் வைத்திருப்பதால் பக்தர்கள் இறைவனைவிடப் பெரியவர்களல்லவா? அதனால்தான்" என்று புன்னகை மாறா முகத்துடன் எவ்வளவு அழகாய்க் கூறினார்.

“அப்படியானால் நீங்கள் அன்னையைத் தரிசிக்க ஆர்வப்படவில்லையா?” என்றார்.

“என்னைவிட உங்களுக்கு அதிக ஆர்வம் இருப்பதால் இந்தச் சிறப்பு அனுமதிச் சீட்டை தங்களுக்கே தருகிறேன்” என்று ஓர் சிறப்பு அனுமதிச் சீட்டைத் தந்தார். “நன்றி, மிக்க நன்றி. உங்கள் வாய்ப்பை எனக்கு விட்டுக்கொடுத்து விட்டீர்கள்” என்று மனம் நெகிழ்ந்து கூறினார் பக்தர்.

“நான் ஏன் இதை விட்டுக் கொடுத்தேன் என்பதைத் தரிசனம் பெறும் போது புரிந்து கொள்வீர்கள்” என்று கள்ளமில்லாத குழந்தைச் சிரிப்பு சிரித்த வண்ணம் கையசைத்து விடைபெற்று, காரில் ஏறி மறைந்து விட்டார்.

நல்ல கோடையில் சில்லென்ற மழை நீரில் நனைந்த பரவசம் ஏற்பட்டது. வரிசையில்லை, கும்பலில்லை, நெரிசல் இல்லை. இலவச அனுமதி பெற்றவர் செல்லும் நேரம். வழி தெரியாத இவரை, இவர் கையிலுள்ள சீட்டைக் கண்டதும் வழிகாட்டி அழைத்துச் சென்றனர். ஸ்ரீ அன்னையின் திவ்ய சூழல் நிறைந்த அறையில் பிரவேசித்தவுடன் உடல் சிலிர்த்தார். அங்கு அழகிய இருக்கையில் வீற்றிருக்கும் திருவுருவப்படம் யாருடையது? அவர்தாம் ஸ்ரீ அன்னையா? சற்றுமுன் வெளியே அந்தச் சிறப்பு அனுமதிச் சீட்டை அளித்தவரல்லரோ இவர்? இவர் எப்படி இங்கே? அங்கு இவருக்கு அளித்த தரிசனச் செய்தி அட்டையில் கம்பீரமாய்ச் சிரித்தவர் தாம் சற்றுமுன் வெளியே கண்டவரல்லரோ? என்ன விந்தையிது! உடலே சிலிர்த்தது. நீங்கள் இறைவனைத் தேடுகிறீர்கள். நான் பக்தனைத் தேடுகிறேன் என்றாரே. அதன் பொருள் என்ன? நான் ஏன் இதை விட்டுக் கொடுத்தேன் என்பதை நீங்கள் தரிசனம் பெறும்போது புரிந்து கொள்வீர்கள் என்றாரே. ஸ்ரீ அன்னையே, நீரே வந்து எம்மைத் தடுத்தாட்கொண்டீரோ? கால் நகர்ந்தது. நெஞ்சு அங்கேயே ஒட்டிக்கொண்டு வரமறுத்தது.

(கதையில் இங்கு சிறு இடைவெளி. அவர் பெற்ற பரவசத்தை நீங்களும் அனுபவிக்கத்தான்.)



இவர்யார்? இவரைப்பற்றி ஏதுமறியாத எனக்கு இவர் எப்படித் தரிசனம் தந்தார்? உங்கள் வாய்ப்பை எனக்கு விட்டுக் கொடுத்தீர்கள் என்று அவரிடமே கூறினேனே. அவரே அவரைத் தரிசிக்க வேண்டுமா என்ன? இவ்வாறு அன்னையில் தம்மைக் கரைத்துக் கொண்டிருக்கும் இவரை நோக்கி ஒருவர் வந்தார். “இன்று ஸ்ரீ அன்னையின் ஜென்ம தினம். ஒவ்வொரு ஜீவராசியும் அடுத்த உயர்ந்த நிலையில் ஜனிக்கும் நன்னாள். எனவே, இப்புத்தகத்தை (ஸ்ரீ அன்னை) ஓர் அன்பருக்குப் பரிசளிக்கத் தோன்றியது. உடன் நீங்கள்தான் என் கண்ணில் அகப்பட்டீர்கள்” என்று புன்னகையுடன் ‘தி மதர்’ என்ற புத்தகத்தை அவரிடம் கொடுத்தார்.

கண்கள் பனிக்க இரு கையேந்திப் பரவசத்துடன் பெற்றுக் கொண்டார். தான் அறிய விரும்புவதை ஆண்டவன் தருகிறான் என்றுணர்ந்தார்.

இனி ஊர் திரும்ப வேண்டியதுதான் என்று பேருந்து நிலையம் நோக்கி நடக்கத் தொடங்கியவுடன் மிக அழகிய மேலைநாட்டுக் கார் ஒன்று இவரருகே வந்து நின்றது.

‘கண்ணாடிக் கதவை கீழிறக்கி இவர் முகத்தைப் பார்த்த கார் டிரைவர் நீங்கள் எங்கே போக வேண்டும்?’ என்றார்.

தன்னூர்ப் பெயரைக் கூறிய இவர், “பஸ் பிடிக்க பஸ் நிலையம் போக வேண்டும்” என்றார்.

“உங்கள் ஊரைத் தாண்டித்தான் நான் போக வேண்டும். வழியில் இறக்கி விடுகிறேன். வண்டி காலியாக இருப்பதால் தரிசன நாளில் ஓரன்பருக்கு உதவ ஆர்வப்படுகிறேன்” என்றார். “அன்பனா? நானா?” என்று தமக்குத்தாமே உள் மனதில் கேட்டுக் கொண்டது டிரைவருக்கு எப்படித் தெரிந்தது என்று அதிசயக்கும்படி,

“எப்படி உங்களை அன்பர் என்று கண்டுபிடித்தேன் என்று நினைக்கிறீர்களா! கையில் ‘தி மதர்’ புத்தகம் வைத்திருக்கிறீர்களே அதைப் பார்த்துத்தான் கண்டுபிடித்தேன்” என்றார் சிரித்துக்கொண்டே.

டிரைவர் தம் பக்கத்து சீட்டில் இவர் அமருமாறு கதவைத் திறந்து விட்டார்.

இவ்வளவு உயர்தரக் காரில் டிரைவர் மட்டுமிருப்பதால் யாருடைய காரோ என்று நினைத்தார்.

"என்ன நினைக்கிறீர்கள்? காரின் சொந்தக்காரரைக் கேட்காமல் டிரைவர் இஷ்டப்பட்டவரை ஏற்றிக் கொள்கிறார் என்றா?" என்று பாதையில் கவனமாய், ஸ்டியரிங்கைப் பற்றிய கையுடன் புன்சிரிப்பு மாறாமல் கேட்கிறார்.

என்ன இவர்? மந்திரவாதிபோல் நாம் நினைப்பதை-யெல்லாம் சொல்கிறார் என்று எண்ணியவர் கண்ணில் காரின் முன்புறம் சற்றுமுன் தரிசன அட்டையில் பார்த்த அதே ஸ்ரீ அன்னையின் திருவுருவம் பொறித்திருந்தது.

"இந்தக் காரின் சொந்தக்காரர் ஸ்ரீ அன்னையின் பக்தரா?" என்று ஆர்வம் மேலிடக் கேட்டார்.

"அதுதான் இல்லை" என்றார் டிரைவர். பிறகு அவர் "திருவுருவம் இதில் பொறிக்கப்பட்டிருகிறதே?" என்றார்.

"உங்களை இறக்கிவிடும்போது அந்த இரகஸ்யத்தைச் சொல்கிறேன். யாரிடமும் சொல்ல வேண்டாம்" என்றார் சிரித்துக்கொண்டே.

இவர் அன்னை பக்தர் என்பதால் கார் சொந்தக்காரருக்குத் தெரியாமல் தாம் காரோட்டும் போது மட்டும் அந்த திருவுரு-வத்தைக் காரில் வைத்துக் கொள்வதாகச் சொல்வார் என்று எண்ணிக் கொண்டார்.

இறங்குமிடம் வந்தது. நன்றி கூறி இறங்கிக் கொண்டார். "கார் சொந்தக்காரர் அன்னை பக்தரா என்று கேட்டீர்களே அதற்கு விடை வேண்டாமா?" என்று குறும்பாய்ச் சிரித்தார்.

"ஆமாம் ஆமாம். மறந்தே போனேன். நீங்கள் சென்ற பிறகு கேளாது போனோமே என்று வருந்துவேன். சொல்லுங்கள். மிகவும் ஆர்வமாயுள்ளது" என்றார்.

கதவை மூடியவண்ணம் காரைக் கிளப்பிக்கொண்டு "எல்லோருமே இந்தக் கார் சொந்தக்காரரின் பக்தர்கள்தாம்" என்று கூறிப் பறந்து விட்டார்.



என்ன சொல்கிறார்? காரில் நெம்பர் பலகை ஏதுமில்லை. ஓ இது ஸ்ரீ அன்னையின் கார் என்றல்லவா சொல்லியிருக்கிறார். தாம் முதன் முதலில் சந்தித்தவர் 'உங்கள் ஆர்வத்திற்கேற்ப அன்னை தன்னை உங்களுக்குப் புரிய வைப்பார்' என்றாரே, அது எவ்வளவு பெரிய உண்மை. அவர் தாமேயல்லவா தம்மை எனக்குக் காட்டியிருக்கிறார் என்று வியந்தார்.

நடந்தவற்றையெல்லாம் நினைக்க நினைக்க ஏதோ ஓர் அற்புதவுணர்வு உள்ளே மலர்ந்தது. ஸ்ரீ அன்னை என்ற அந்தப் புத்தகத்தைப் படித்தார். தாம் இதுவரை இன்னது என்று அறியாமல் நாடிய பொருள் தன்னைத் தேடி வந்து உருக்காட்டியது எனப் புரிந்து கொண்டார்.

உறக்கம்கூட இனிமையாய் இருந்தது. "நான் ஏன் விட்டுக் கொடுத்தேன் என்பதைத் தரிசனம் பெறும் போது புரிந்து கொள்வீர். காரின் சொந்தக்காரர் யாரென்ற இரகஸ்யத்தை உங்களை இறக்கிவிடும்போது சொல்கிறேன்" என்ற தொடர்கள் அளித்த ஆனந்தம் ஆனந்தமாயிருந்தது.

விடியும் நேரம், இனிய தியானம் போன்ற உறக்கத்தில் திடீரென பொன்னாடை தரித்து பொன்மயமாய் ஸ்ரீ அன்னை காட்சி தந்தார். கனவா நனவா என்று அறிய முடியாது தவித்தார்.

ஸ்ரீ அன்னை சிரித்தார். "இன்னும் எத்தனை நாட்கள் பக்தி செய்யப் போகிறாய்? நீ நானாக வேண்டாமா?" என்று சிரித்தார். மறைந்து விட்டார்.

இனியவுணர்வுகளோடு கண் விழித்தார். "நீ நானாக வேண்டாமா?" என்றாரே, நானெப்படி அவராக முடியும். ஒரே குழப்பமாயிருந்தது. அதை அறிந்து கொள்ளும் ஆர்வமும் பெருகிற்று.

உள்ளே இந்த இனிய உணர்வுகளைச் சுமந்த வண்ணம், நேற்று தம் நிறுவனத்தின் பொருட்டு தாம் சென்று வந்த செய்தியைப் பொருட்களை ஒப்படைக்க, முதலாளியின் வீட்டிற்குச் சென்றார். தம் பணியை நிறைவேற்றியதைக் கூறினார். முதலாளி நன்றியால் பூரித்தார். "சற்று இருங்கள் இவ்வளவு திறமையாய்ச் செயலாற்றி வந்த உங்களைப்

பாராட்டிப் பரிசளிக்கத் தோன்றுகிறது" என்று உள்ளே சென்றவர் ஒரு புத்தம் புதிய புத்தகத்துடன் வந்தார்.

"என் பையன் நேற்று 'அன்னை தியான மையம்' என்ற இடத்திற்குப் போயிருக்கிறான். அங்கு ஏதோ கேட்டறிந்து புத்தகச் சேவை என்று வண்டி புத்தகங்கள் கொண்டு வந்திருக்கிறான். இதைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இதை விற்பனைக்காக விற்கக் கூடாது. ஏற்பவர் மனம் உவந்து ஏற்கும்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான். அதை வாங்கும் தகுதி எனக்கில்லை. ஆனால் நீர் ஒரு கடவுள் பக்தராயிற்றே. இது உமக்குப் பொருத்தமாய் இருக்கும் எனத் தோன்றுகிறது" என்று கூறி கொடுத்தார்.

நேற்று தரிசன அட்டையில் பார்த்த அதே 'ஸ்ரீ அன்னையைப் பற்றிய அருளுரைகள்' என்று தலைப்பிடப்பட்டிருந்தது. நன்றியுடன் பெற்றுக் கொண்டார்.

ஸ்ரீ அன்னை தம்மைத் தேடி வந்து ஏற்றுக் கொண்டு தம் கேள்விகளுக்கு விடை கூறித் தெளிவுபடுத்துகிறார் என்று புரிந்து கொண்டார்.

அன்னை என்பவர் வழிபாட்டிற்குரிய கடவுள் மட்டுமல்லர். மனிதனை இறைவனாக்க நம்மிடையே வந்துள்ள பரம்பொருள் சக்தி என்றுணர்ந்தார். மேன்மேலும் படித்துத் தான் அறிந்து கொள்ள வேண்டிய பரமனின் விருப்பம் எது என்று கண்டுகொண்டார்.

என்ன கண்டுகொண்டார் என்பதை அறிய வேண்டுமா? தாம் பரமனின் கைக் கருவியாகத் தன்னை விட்டுவிடுதலே இனி உள்ள பணி எனவும், சமர்ப்பணமும் சரணாகதியுமே வழி எனவும் கண்டுகொண்டார்.

(முற்றும்)

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# பூரண சமர்ப்பணம்

சமர்ப்பணம் பூரணம் பெறும் பொழுது சரணாகதியாகும். மூச்சு விடுவதற்கு இடைவெளியில்லை என்பது போல் சமர்ப்பணம் செய்யும் பொழுது இடைவெளி வரக்கூடாது. சமர்ப்பணத்திற்குரிய இலட்சணம் பூரணம். ஒரு சிறு கம்பெனி பாட்டில் விற்கிறது. இதுவரை அவர்கள் பெற்ற பெரிய ஆர்டர் 15,000 பாட்டில்கள். விற்பனை என்ற செயலில் பல பகுதிகள் உண்டு. விற்பனை இலாபம் தரும் என்பது ஓர் எண்ணம். விற்பனையைச் சமர்ப்பணம் செய்தால் அது சேவையாகும். சேவை வேலையைச் சிறப்பாக்கும். வேலை சிறப்படைய அதன் பகுதிகள் முழுமையுற்றுச் சிறப்படைய வேண்டும். பாட்டில் சரக்கு. அது எல்லா வகையிலும் முதல் தரமாக இருந்தால் விற்பனை சிறப்படையும். பாட்டில் முதல் தரமாக அதன் உருவம் அழகாக இருக்க வேண்டும், மூடி பாட்டிலினுள் பொருந்துவது மிருதுவான மென்மையாகும். விற்பனைக்கு எழுதும் ஆர்டரில் தவறு இருக்கக் கூடாது. ஓர் ஆர்டர் டைப் செய்ய 3½ நிமிஷங்களாகும் எனில் பொதுவாக அதை 9 நிமிஷங்களில் முடிப்பார்கள். அவசரமாகச் செய்தால் 5 நிமிஷங்களில் 2 தவறுகளுடன் டைப் செய்வார்கள். 3 மணி 31 நிமிஷங்களில் டைப் செய்வது சமர்ப்பணமாகாது. அது 3.30 ஆக வேண்டும். தவறிருந்தால் சமர்ப்பணம் குறையாகும். பெரு முயற்சியால் தவறின்றி 3.30-இல் செய்து முடிக்கலாம். அது சமர்ப்பணமாகும். முயற்சியின்றி செய்வது முழுமை. செயலுக்கு ஜீவனுண்டு. செயலே தன்னை முழுமையாகப் பூர்த்தி செய்வது பூரணம். அந்த கம்பெனியில் எவரும் சமர்ப்பணம் செய்யவில்லை. அன்பர் ஒருவரை கம்பெனிக்கு ஆலோசனை செய்ய அழைத்தார்கள். அவர் வருகைக்கு நாள் குறித்தார்கள். அடுத்த ஆர்டர் சைனாவிலிருந்து வந்தது. அன்பரால் அன்னை ஸ்பர்சம் பெற்றது கம்பெனி.

*(தொடர்ச்சி பின்பக்க அட்டையில்)*

*(முன்பக்க அட்டை தொடர்ச்சி)*

அதில் அன்னை சூழல் உண்டு. ஆர்டர் ஐந்து மில்லியன் பாட்டில்கள் ஆயிற்று.

நம் செயல் சமர்ப்பணத்தால் பூரணமானால் மடி நிறையும், மனம் நிறையும். நெஞ்சு விம்மும், ஆத்மா விழிக்கும், பத்து ஆண்டிற்குமுன் பண நெருக்கடியால் ஓர் அன்பர் கதறிய நேரம் ஓர் அன்பருக்குச் செய்தி போய் அவர் இருபது லட்ச ரூபாயைக் கொடுத்தார். பெற்றவர்க்கு நினைவிருக்கிறதா என்று தெரியவில்லை. 2 அல்லது 3 ஆண்டுகட்குமுன் 50,000 திருப்பிக் கொடுத்தார். அதன்பின் பலமுறை 50,000 கொடுத்துள்ளார். கால் பாகம் முடிந்திருக்குமா எனத் தெரியாது. நான் இக்கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் சமயம் அவர், கடன் கொடுத்தவர் பாங்குக் கணக்கில் 50,000 கட்டிய செய்தி வந்தது. சமர்ப்பணத்தைப் பற்றிய கட்டுரைக்கு அந்தப் பவர் உண்டு. சமர்ப்பணம் செய்யாமல் அன்பனாக முடியாது. அதிகாரம் செய்தால், ஒட்டுக் கேட்டால், கோள் சொன்னால், சின்ன புத்தி செயல்பட்டால், கேட்காவிட்டால் எதையும் செய்யலாம் என நினைத்தால், அதிகாரியின் பவரை அவரை அறியாமல் செலுத்தினால், சாப்பிட ஆசை எழுந்தால், பொய் சொன்னால், ராகு காலம் பார்த்தால், தகப்பனார் கிளார்க்கான பொழுது ஆபீசர் என்றால், மிகைப்படுத்தி, பொய் சொல்லி பெருமைப்பட கட்சியில் தொண்டரை M.L.A. என்றால் அவர் பல ஜென்மங்கட்கு அன்னையை அறிய முடியாது. அன்னையைப்பற்றிப் பேசினால் அவருக்கு ஜுரம் வரும். இவ்வளவும் செய்பவரிடம் உள்ள “நல்லதின்” மூலம் அன்னை சூழல் செயல்பட்டு 27 ஆயிரத்திற்கு விற்க முடியாத பொருளை அன்னை தரிசனத்திற்கு அவர் வந்ததால் 81 ஆயிரத்திற்கு விற்க முடிந்தது. அன்னையை அறிவது ஆன்மிக பாக்கியம். ஏற்பது யோகம்.